விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Sri Lanka

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 13 புதன்கிழமை (25.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 068

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# விசாரணையை வலியுறுத்தி திரண்டனர் தமிழ் மக்கள்!

## அமைதிப் பேரணியில் நேற்று ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

ஐ.நாவிடம் நீதிகோரி யாழ். பல்கலைக்கழக சமூகத்தினால் நேற்று மேற்கொள்ளப்பட்ட அமைதிப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இவ் அமைதிப் போராட்டத்தில் திரண்டிருந்த மக்கள் இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணையே வேண்டும் எனவும், தமிழ் மக்களை ஐ.நா. ஏமாற்றக் கூடாது எனவும் கோரியிருந்தனர். (23 ஆம் பக்கம் பார்க்க)



## சுமந்திரனின் உருவப் பொம்மை எரிப்புக்கு மாகாண சபை கவலை

(கொழும்பு)


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் உருவப்பொம்மை எரிக்கப்பட்ட சம்பவத்திற்கு வடமாகாண சபையில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த செயல் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட செயல் எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

மாகாணசபையின் 25-வது அமர்வு நேற்றையதினம் நடைபெற்றிருந்தது. இதன்போது மாகாண கடற்றொழில் அமைச்சர் பா.டெனீஸ்வரன் கடந்த 21-ம் திகதி காணாமல் போனவர் 23ஆம் பக்கம் பார்க்க....

## குற்றவாளிகளே விசாரணை செய்வதா?

## மன்னார் ஆயர் கேள்வி

(மன்னார்)



குற்றம் செய்தவர்களிடமிருந்து தீர்ப்பு கிடைக்காதென்ற காரணத்தினாலேயே தமிழ் மக்கள் சர்வதேசத்திடம் சென்றிருந்தனர் ஆனால் மீண்டும் அதே போன்ற தான குற்றவாளிகளே விசாரணை செய்யும் உள்நாட்டு விசாரணையில் நம்பிக்கை இல்லை என்றும் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தெரிவித்துள்ளார்.

குற்றம் செய்தவனை நீதவானாக்குவது எப்படி? எனக் கேள்வி எழுப்பியிருக்கும் இராயப்பு ஜோசப் சர்வதேசம் மீண்டும் தமிழ் மக்களை கைவிட்டுவிட்டதா அல்லது ஏமாற்றி விட்டதா எனக் கருதும் நிலையிலேயே தமிழ் மக்கள் தற்போது உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் வெளியிடப்பட இருந்த இலங்கை மீதான ஐ.நா. விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அந்த அறிக்கையை வெளியிட்டு தமிழ் மக்களுக்கு நீதியை வழங்கக் கோரியும் நேற்று யாழில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கை 23ஆம் பக்கம் பார்க்க....

## இனவாதத்திற்கு எதிராக ஜனாதிபதி, பிரதமர் இணைவு

## பேரணி நடத்தவும் ஏற்பாடு

(கொழும்பு)

இனவாதத்திற்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பேரணி ஒன்றை நடத்த உள்ளனர்.

சில தரப்பினர் நாட்டுக்குள் இனவாதத்தை ஏற்படுத்த முயற்சித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டல்களின் அடிப்படையில் இந்த எதிர்ப்பு போராட்டப் பேரணி நடத்தப்பட உள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா. அலுவலகம் சென்னையில் முற்றுகை

(கொழும்பு)

இனப்படுகொலை செய்யப்பட்ட மூன்றரை லட்சம் தமிழீழ மக்களுக்கு நீதி கிடைத்தாக வேண்டும். ஐ.நா சபை தாமதமின்றி போர்க் குற்றவிசாரணை அறிக்கையை உடனே வெளியிடக் கோரி பேரணி நடத்திய யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதர 23ஆம் பக்கம் பார்க்க....



## தூண் இடிந்து வீழ்ந்து தொழிலாளி பலி

(யாழ்ப்பாணம்)

சீமெந்து தூண் இடிந்து வீழ்ந்ததில் தொழிலாளி ஒருவர் உடல் நசுங்கிப் பலியானார்.

இவ் விபத்து சம்பவம் நேற்றுக் காலை 8.45 மணியளவில் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் தனியார் கட்டுமான நிறுவனம் ஒன்று புதிதாக நிர்மாணித்து வந்த வீட்டின் மேற்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த தூணினை 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை பூர்த்தி

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பிலும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாகவும் விசாரணைகளை முன்னெடுத்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால விசாரணை அறிக்கை தயாரிப்புப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

இந்த அறிக்கை மார்ச் மாதம் முற்பகுதியில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. உள்ளக விசாரணை 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவக அனுசரணையுடன்

சர்வதேச அழகுக்கலை நிபுணர்
திருமதி S.V.சூரிய பிரதீபா
(Dip.in.PG in BTHD., Ayurvedic Therapist (India, UK). Aroma Therapist Cosmetologist)
சந்திப்பும், பாடநெறி பதிவுகளும்.



- இடம்:-புதிய உயர் கலைக் கல்லூரி
  இல.95, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
- காலம்:-28.02.2015 சனி, 01.03.2015 ஞாயிறு
  காலை 9.00 முதல் மாலை 5.00 மணிவரை
- தலைமை:-திருமதி கர்ணி தனபாலன் (பணிப்பாளர்)
  (சிறுவர் பூங்கா முன்பள்ளி வளாகம்) திருநெல்வேலி.
- விடயங்கள்:-I.புதிய அழகுக் கலை பயில்வு சர்வதேச தரத்திலான டிப்ளோமா பாடநெறிகள் (தமிழ், ஆங்கில மொழி மூலம்) வழிகாட்டல்-பதிவுகள்
  II.விசேட சலுகைகளுடன் அழகுக்கலை டிப்ளோமா பதிவுகள். பெண்கள் தம் ஆளுமைகளை விருத்தியாக்க உதவிகள்.
  III.முகம், சருமம், கூந்தல் அழகுக்கலை தொடர்பான ஆலோசனைகள், சிகிச்சைகள்,
  IV.வேலை செய்யும் பெண்களுக்கான விசேட அழகுபடுத்தும் ஆலோசனைகள்.

சுயதொழில் ஆர்வமுள்ள தம்மை அழகுபடுத்தி ஆளுமையை வளர்க்க ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்ற முடியும்

முன்பதிவுகளுக்கு:-
0770681958

Suriya Piradeeba's
Natural Science of Beauty
International Professional Beauty Clinic, Hair & Beauty Academy

(9613)


## பெயர் மாற்றம்

பருத்தித்துறை, தும்பளையை வசிப்பிடமாகக் கொண்ட தங்கராசா தேவதாசன் ஆகிய நான் 25.02.2015 இல் இருந்து தங்கராசா கங்கைஆத்மன் என்று மாற்றம் செய்துள்ளேன் எனவும் தொடர்ந்து சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
**தங்கராசா கங்கைஆத்மன்**
(9614)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## பெயர் மாற்றம்

மல்வம், உடுவிலை வசிப்பிடமாகக் கொண்ட விமலநாதன் கரோலினா ஆகிய நான் 25.02.2015இல் இருந்து எனது பெயரை விமலநாதன் கஜானி என பெயர் மாற்றம் செய்கிறேன் எனவும் தொடர்ந்து சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இத்தால் அறியத்தருகிறேன். (9616)

உண்மையுள்ள **விமலநாதன் கஜானி**

## கண்ணீர் அஞ்சலி

### குமாரசாமி ஜெகதீஸ்வரன்

சிவநகர் விவசாயக் குழு அங்கத்தவரான கு. குணதீஸ்வரன் அவர்களின் சகோதரரான கோப்பாய் வடக்கு இராச வீதியைச் சேர்ந்த குமாரசாமி ஜெகதீஸ்வரன் (ஆசிரியர்) அகாலமரணமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்
**சிவநகர் விவசாய குழு.**
(சி-153)


**May 9th யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்.**



# IELTS™
English for International Opportunity

## Speciality of our course

- Special attention to Advanced Grammar Vocabulary
- 12 Practice tests with explanation
- Unlimited hours for listening practice
- Speaking practice

**British Council IELTS Provincial Partner of the Year - 2014**



(சி-154)

வகுப்புக்கள் 28.02.2015ல் ஆரம்பம்



Course Schedule

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.00 -11.00 | 8.30-10.30, 5.00 - 700 |

## BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887



# BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 1/2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது.
இதற்கான பல மாதிரிப் பரீட்சைகள், செயல் விளக்கங்களுடன் எமது நிறுவனத்தில் நடைபெறும்.

**KET - Key English Test** Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கானது
2015ம் ஆண்டு புதிய விசா நடைமுறைகளுக்கமைய City & Guilds ன் A1 பரீட்சைகள் நிறுத்தப்படுவதனால் அதற்குப் பதிலாக KET பரீட்சை ஏற்றுக் கொள்ளப்படும். இப் பயிற்சி நெறிக்குரிய எல்லா வகுப்புகளும் எம்மால் வெற்றிகரமாக நடாத்தப்படுகிறது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Bathes Starts on
28/02/2015 @ 2.30pm
02/03/2015 @ 9.00am
05/03/2015 @ 9.00am
07/03/2015 @ 2.30pm

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

No.15 2/1, Sirambiyady Lane, Off Stanley Road (Above Sathosa SM), Jaffna. Tel :021-2224550
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935
(சி-156)



# 20% Off
சர்வதேச விமானப்பயண பற்றுச்சீட்டுகள் விசேட விலைக்கழிவுகளில்

nation popular travels & tours

## Nation Popular Travels and Tours



Hotline - 0773083820
www.nationtravels.com

| லண்டன் | பிரான்ஸ் | கனடா | ஜேர்மன் |
|---|---|---|---|
| 43300/= o/w | 43400/= o/w | 86000/= o/w | 42000/= o/w |

Jaffna - 021 4 920 920 Colombo - 0114 378 117 Vavuniya - 024 4 930 830


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி தலைமையிலான அரசு நீண்ட தூரம் பயணிக்காது!

## முன்னாள் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரியின் அரசாங்கத்தால் நீண்ட காலம் செயற்பட முடியாதெனவும் தேவை ஏற்பட்டால் தற்போதைய அரசாங்கத்தை தோற்கடித்துவிட்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியால் அதிகாரத்திற்கு வரமுடியும் என முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.**

மத்துகம கலையரங்கத்தில் நேற்று முன்தினம் பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அடுத்த வாரம் பாராளுமன்றம் கூடவுள்ளது. பாராளுமன்றத்தில் தற்போதைய அரசாங்கம் வேண்டாம் என்று தீர்மானித்தால் மைத்திரி அரசாங்கத்தின் பலத்தினை எங்களால் பெற முடியும்.

ஆனாலும் நாங்கள் பலத்தை பெற்றுக்கொள்ள மாட்டோம். காரணம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நாங்கள் மதிக்கிறோம். அவர் கேட்டுக்கொண்டது போல் 100 நாள் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவோம் என குமார வெல்கம மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## திருமலை துறைமுகத்தில் மண்ணகழ்வுக்குத்தடை

திருகோணமலை துறைமுகத்திற்கு சொந்தமான இடங்களில் பல காலங்களாக இடம்பெற்று வருகின்ற மண் அகழ்வு வியாபாரங்களை உடனடியாக நிறுத்துமாறு துறைமுகங்கள் மற்றும் வானூர்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அறிவித்துள்ளார்.

திருகோணமலைக்கு விஜயம் மேற கொணட அமைச்சருக்கு அங்குள்ள ஊழியர்கள் வழங்கிய தக்வல்களுக்கமையவே இவ்வாறான அறிவித்தலை அவர் விடுத்துள்ளார்.

மேலும் மண் அகழ்வுகளுக்காக சுற்றுச் சூழல் அறிக்கை எதுவும் அகழ்வில் ஈடுபட்டவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## சிறை வைத்தியசாலையில் ஷசி

இராஜதந்திர கடவுச்சீட்டில் போலியான தகவல்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி ஷசி வீரவன்சவை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றும்படி உத்தரவு விடப்பட்டுள்ளது.

மாலபேயில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவியான சஷி வீரவன்சவை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றும்படி கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ-11)

## அங்குரார்ப்பணமும் நிர்வாகத் தெரிவும்

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் அனுசரணையுடன் வடக்கு கிழக்கு மாகாண உத்தியோகத்தர் சங்கம், வடக்கு கிழக்கு மாகாண அரச பொது ஊழியர் சங்கம், வடக்கு கிழக்கு மாகாண ஜீவோதய நலன் புரி ஊழியர் நிறுவனம் என்பன இணைந்து ஸ்ரீலங்கா அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்க சம்மேளனத்தை அங்குரார்ப்பணம் செய்துள் ளன. கடந்த 31 ஆம் திகதி கல் முனையில் எஸ். லோகநாதன் தலைமையில் இவ் அங்குராப் பண நிகழ்வு இடம் பெற்றுள்ளது.சம்மேளனத் தலைவராக எஸ். லோகநாதன் செயலாளராக பி.கோகுலோஜன் , பொருளாளராக இறாலெவ்வை , உப தலைவராக வ. ஆசி ர்வாதம் இணைச செயலாளராக கே. கம்ஸநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

## உரியநேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்!

### ஜே.வி.பி.வலியுறுத்து

(கொழும்பு)

உரிய நேரத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது எமது கட்சி எந்தவொரு கட்சியுடனும் கூட்டணி சேரப் போவதில்லை.

பொதுத்தேர்தலில் ஜே.வி.பி. கட்சி தனித்தே போட்டியிடும். பல்வேறு காரணங்களைக் காட்டி அரசாங்கம் பொதுத் தேர்தலை ஒத்தி வைக்க முயற்சிக்கின்றது.

எனினும் அவ்வாறு தேர்தலை ஒத்தி வைக்கும் உரிமை அரசாங்கத்திற்கு கிடையாது.

ஜனாதிபதியின் 100 நாட்கள் திட்ட யோசனையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த வாக்குறுதியை மீறும் முயற்சிகளை சில தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும், இவ்வாறு நாடாளுமன்றத் தேர்தல் ஒத்தி வைக்கப்படுவதனை அனுமதிக்க முடியாது என ரில்வின் சில்வா கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டணி சேர்வது தொடர்பில் ஊடகம் எழுப்பிய கௌ்விக்கு பதிலளித்த போது இதனை தெரிவித்துள்ளார். (இ-5)




## இராசி பலன்

25.02.2015
(மாசி 13, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
சப்தமி மாலை 5.05 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 11.23 மணிவரை
இராகுகாலம் 12.29 - 1.59 மணிவரை
சுபநேரம் 4.59 - 6.29 மணிவரை
கார்த்திகை விரதம், அமிர்தசித்தம்

வளவன்

**மேடம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும்.

**மிதுனம்:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வியாபாரத்தில் மாற்றம் செய்யும் சூழ்நிலை உருவாகும், கூடுதல் பொறுப்புக்களால் அதிக நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடிவரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உறவினர் வருகையால் குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** வீட்டை அழகாக வைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**கன்னி:** நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு நீங்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரயாணங்களின் போது ஆதாயமுண்டு.

**துலாம்:** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** பாடுபட்டதற்கு ஏற்ப பலன் கிடைக்கும், நண்பர்களுக்காக செலவுகள் செய்யும் சூழ்நிலை உருவாகும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**தனுசு:** பழைய கடன் பிரச்சினையை தீர்க்க ஆக்கபூர்வமாக யோசிப்பீர்கள், பகைவர்கள் விலகுவர், உடல்நலம் சீராகும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு.

**மீனம்:** ஆதரவுக்கரம் நீட்டுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும், தொழிலில் இருந்த எதிர்பார்ப்புகள் மாறும், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 153**

## பயத்தை எதிர்கொள்ளல்



ஸ்வாதிஷ்டான சக்கரம் தொப்புளுக்கு 2 அங்குலம் கீழே இருக்கிறது.

ஸ்வாதிஷ்டானா என்றால் இருப்புத்தன்மை நிலை கொண்டிருக்கும் இடம் என்ற பொருள். ஸ்வ என்றால் தான் அதிஷ்டானா என்றால் நிலை பெற்றிருத்தல்.

அது பயத்தால் முக்கியமாக மரணம் பற்றிய பயத்தால் பூட்டப்படுகிறது.

பயத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் மரணத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் அதைத் திறக்க முடியும்.

தியான முறை இருள் தியானம்- தாந்த்ரீக முறையிலிருந்து எடுக்கப்பட்டது.

இந்தச் சக்கரம் பயத்தால் பூட்டப்படுகிறது. நமது எல்லா பயங்களும் உண்மையில் மரணத்தைப் பற்றிய பயமே; ஆனால், பல்வேறு மாறுவேடங்களில் இருக்கிறது. அவ்வளவுதான். நமது ஒவ்வொரு பயமும் மரணத்தைப் பற்றிய பயத்துடன் தொடர்பு உடையது தான். ஆனால் சுருட்டி வைக்கப் பட்டீருக்கிறது.

சுருட்டி வைக்கப்பட்டிருப்பதால் அதை நம்மால் மரணம் பற்றிய பயமாகக் காண முடிவதில்லை. பயம் என்பது இல்லை என்றால் மரணம் என்ற வார்த்தையே, நாம் அதனுடன் தொடர்புபடுத்தி வைத்திருக்கும் பொருளை இழந்து விடுகிறது.

அதனால் மரணம் என்பது என்ன?

நாம் இந்தக் கேள்வியை உங்களிடம் கேட்டால் நீங்கள் ஸ்வாமிஜி, மரணம் என்பது நமது வாழ்வின் இறுதியில் நிகழ்வது என்று சொல்வீர்கள், மரணம் என்பது அவ்வளவுதான் என்றால், அது மிகவும் சுலபமாக இருந்திருக்கும்!

ஆனால், மரணம் என்பது நமது வாழ்வின் இறுதியில் நடக்கும் ஒரு விடயம் அல்ல. அது நமது வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு விடயம். நமது ஒவ்வொரு செயலுமே விழிப்பற்ற நிலையில் நமது மரணத்துடன், மரணம் பற்றிய பயத்துடன் தொடர்பு உடையது. மரணம் நமது வாழ்க்கையின் தன்மையையே மாற்றிவிடுகிறது. அது முடிவல்ல ; இது நமது வாழ்வின் உச்சக்கட்டம்- நமது வாழ்வு முழுவதும் அதை நோக்கியே இருக்கிறது!

நான் ஏன் இதைச் சொல்கிறேன்?

ஏனெனில், நமது வாழ்வு முழுவதுமே, மரணம் பற்றிய நமது கருத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறது. நமது சமூக அமைப்புகூட, மரணம் பற்றிய நமது கருத்தினாலேயே வழி நடத்தப் படுகிறது.

எல்லா சிறந்த மதங்களும் உலக தத்துவங்களும் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் முயற்சியிலேயே எழுந்துள்என. மரணத்திற்குப் பின் என்ன நிகழ்கிறது? இந்த ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் முயற்சியிலேயே, பல்வேறு வாழ்க்கைத் தீர்வுகள் எழுந்துள்ளன. ஒரே ஒரு வாழ்க்கை என்பதில் நம்பிக்கை உள்ள, மறு பிறப்பைப் பற்றிய கருத்துக்களே இல்லாத கலாச்சாரங்கள், அவர்களுடைய சக்தி முழுவதையும் வாழ்க்கையை வளப்படுத்துவதிலேயே கொட்டிவிட்டனர். அவர்கள், செய்திகளை உட்கிரஹித்தல், அறிவைச் சம்பாதித்தல், உலகாயதமான சுகங்கள் என்ற வகையில் ஒரு உச்சத்தைத் தொட்டுவிட்டனர்.

இந்தக் கலாச்சாரங்களே அறிவியலைக் கொடுத்திருக்கிறது. அறிவியல், வாழ்க்கையை அதன் அதிக பட்சத்தில் வாழ உதவுகிறது. அறிவியல், நாம் இந்த வாழ்க்கையிலிருந்து அதிக பட்சத்தைப் பெற உதவுகிறது.

மறுபிறப்பை நம்பும் கலாச்சாரங்கள், அவர்களது வாழ்வின் மையத்தை உள்நோக்கித் திருப்பியுள்ளன. அவர்களது தேடல் வேறுவிதமானது. அவர்கள் வாழ்க்கையை ஒரு அவசரகதியில் வாழ தூண்டப் படுவதில்லை; ஏனெனில், அவர்களுக்கு அழிவற்ற தன்மை கொடுக்கப்பட்டிருக்கிறது. (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி




### 5 டொலர்கள் மூலம் 1 மில்லியன் டொலர்கள் ஜாக்பொட்டை வென்ற பெண்!

கனடாவில் பெண் ஒருவர் நயாகராவில் உள்ள ஸ்லொட் மெசினிற்குள் 5 கனடிய டொலர்களை செலவழித்து 1.03 மில்லியன் டொலர்களை வென்றுள்ளார்.

கனடாவின் ரொறொன்ரோவை சேர்ந்த Casilda Pouk என்ற 51 வயது பெண்மணி அவ்வப்போது கசினோ விளையாடும் பழக்கமுள்ளவர்.



இந்நிலையில் ஞாயிற்று கிழமையன்று நயாகராவில் உள்ள நிக்கல் ஸ்லொட்டில் விளையாடிய போது இந்த ஜாக்பொட்டை அடித்துள்ளார்.

ஆரம்பத்தில் வேறு மெசின்களில் விளையாடி 200 டொலர்களை இழந்தார். பின்னர் அதிஸ்டவசமாக நிக்கல் ஸ்லொட்டில் விளையாடிய போது மகத்தான வெற்றியை பெற்றார்.

Pouk 1991 இல் ஆயாவாக பணிபுரிய பிலிப்பைன்சிலிருந்து கனடா வந்த இவர், பின்னர் கொன்வீனியன் ஸ்டோர் மற்றும் மளிகை கடைகளில் பணிபுரிந்து தொடர்ந்து மக்டொனால்டில் வேலை செய்துவருகின்றார்.

மேலும், 11 பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் இளையவரான இவர், பிலிப்பைன்சிலிருக்கும் தனது குடும்பத்திற்கு தாராளமாக தன்னால் இயன்ற உதவியை செய்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




### ஓட்ஸ் பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

ஓட்ஸ் - 2 கப்
பச்சைப் பருப்பு - 3/4 கப்
மஞ்சள்தூள் - 1/4 டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு

தாளிக்க:

நெய் - 2 டீஸ்பூன்
மிளகு - 1 டீஸ்பூன்
சீரகம் 1 - டீஸ்பூன்
முந்திரி பருப்பு - 10
இஞ்சி - ஒரு சிறிய துண்டு
கறிவேப்பிலை - கொஞ்சம்



**செய்முறை:**

முதலில் வெறும் பாத்திரத்தல் பச்சைப் பருப்பை வாசம் வர வறுத்துக் கொள்ளவும். பிறகு குக்கரில் ஒரு பாத்திரத்தில் பருப்பு வேகும் அளவு தண்ணீர ஊற்றி, மஞ்சள் தூள் சேர்த்து வேக வைத்துக் கொள்ளவும். பருப்பு முக்கால் பதம் வெந்ததும் அதில் ஒரு பங்கு ஓட்ஸுக்கு இரண்டரை பங்கு தண்ணீர் என 5 கப் தண்ணீர் ஊற்றி கொதி நிலை வரும் வரை மூடி வைக்கவும். கொதி வந்ததும் ஓட்ஸைப் போட்டு, தேவையான உப்பும் சேர்த்து நன்றாகக் கிளறிவிட்டு மூடி வைக்கவும். இரண்டும் நன்றாகக் குழைந்து, வேகும் வரை மிதமானத் தீயில் வைத்திருக்கவும். ஒரு வாணலியில் நெய் விட்டு சூடுபடுத்தவும். அதில் மிளகு(ஒன்றிரண்டாகப் பொடித்து), சீரகம், இஞ்சி, முந்திரி, கறிவேப்பிலை தாளித்து பொங்கலில் சேர்த்து கிளறி இறக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் இடம்பெற்ற இனப்படுகொலை குறித்த ஐ.நா. அறிக்கையை வெளியிடக்கோரி பேரணி!


















ஈழத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச விசாரணை அறிக்கையினை முன்னர் திட்டமிட்டபடியே மார்ச் மாதம் வெளியிடக்கோரி யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் மாபெரும்பேரணியொன்று நேற்றைய தினம் இடம் பெற்றது.

முற்பகல்10 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகிய இப்பேரணி பலாலி வீதி யூடாக கந்தர்மடம் சென்று நல்லூர் ஆலயத்தின் வடக்குப் புறமாக அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவிடத்தில் கூடி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இவ் ஆர்பாட்டத்தில் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை. சர்வ தேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர் ஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா. தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின்பொதுச் செயலாளர்செல்வராஜா கஜேந்திரன். யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் அ.இராசகுமாரன். உட்பட பல பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் மாணவர் ஒன்றியம் . இலங்கை ஆசிரியர் சங்கம் . இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். தமிழ் சிவில் சமூகம் மற்றும் காணாமல் போனோர் உறவினர்கள். பொது அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மன்னார் ஆயருடாக ஐ.நா மனிதவுரிமை ஆணையாளருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தது.

தொகுப்பு:-
உ.சாளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகளின் நன்மை கருதி இ.போ.ச.பேருந்துச்சேவை



(யாழப்பாணம்)

பிரயாணிகளின் நன்மை கருதி பருத்தித்துறையிலிருந்து காலை 5 மணிக்கும் மு.ப. 10.30 மணிக்கும் புறப்படும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் நேற்று முதல் குஞ்சர் கடை, மண்டான் சந்தி, வல்லை ஊடாக யாழ்ப்பாணம் சென்றடைந்தன.

மேலும் காரைநகரிலிருந்து புறப்படும் பேருந்துகள் செவ்வாய்க்கிழமையும் வெள்ளிக்கிழமையும் காரைநகர் சிவன் கோவில் ஊடாக யாழ்ப்பாணம் சென்றடையவுள்ளன.

அதேபோன்று யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் நோக்கிப் புறப்படும் பேருந்துகள் மேற்படி பாதை ஊடாகவே சேவையை மேற்கொள்ளவுள்ளன என வட பிராந்திய இலங்கைப் போக்குவரத்துச்சபை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக இந்த சேவையை உடனடியாக ஆரம்பிக்க அவர் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# புதிய அரசும் எதையும் செய்யவில்லை சர்வதேச விசாரணையே ஒரே வழி!

## யாழ்.பல்கலை.சமூகம் ஐ.நா. ஆணையாளருக்கு மகஜர்

(யாழ்பபாணம்)

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் ஒருமாத காலப்பகுதி தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்திடமிருந்து புதிய மாற்றங்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது என்பது நிருபணமாகிவிட்டது. ஆகையால் சர்வதேச விசாரணையே ஒரே வழி என ஐ.நாவிற்கு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அனுப்பி வைத்துள்ள மகஜரில் சுட்டிக் காட்டியுள்ளது.



அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் வெளியிடுவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த இலங்கை மீதான மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையைத் தாமதப்படுத்தி அதனைச் செப்டெம்பர் 2015 இற்குப் பிற்போட்டமை தொடர்பில் எமது ஆழ்ந்த விசனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் இவ் அறிக்கை திட்டமிட்டபடி வெளிவர வேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தற்போதைய அரசர்ங்கம் , இலங்கையில் இடம் பெற்ற உள்நாட்டுப் போரின் போது இழைக்கப்பட்ட பாரிய கொடுமைகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்கும் என்ற நம்பிக்கையில் அறிக்கை பிற்போடப்படுவதைத் தாங்கள் சிபார்சு செய்துள்ளதாக நாம் புரிந்து கொள்கின்றோம்.

அரசாங்கத்தின் நடைமுறையில் உள்ள நிர்வாகக் கட்டமைப்பையும் (யுத்தத்திற்கு தீவிர பங்காறறியவர்கள் உட்பட), கடந்த கால உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகள் நீதியை நிலைநாட்டத் தவறியமை தொடர்பான வரலாற்றையும் கருத்திற் கொண்டு நோக்கும் போது, இந்த அரசாங்கத்தால் உருவாக்கப்படவல்ல எந்தவொரு உள்நாட்டுப் பொறிமுறையிலும் எமக்கு நம்பிக்கை இல்லை என்பது தெளிவு. இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்துகின்ற சிங்கள பௌத்த தலைமைத்துவங்கள் தொடர்பிலான எமது நீண்டகால அனுபவத்தில், இலங்கை ஆயுதப் படைகளைச் சார்ந்த அங்கத்தவர்கள் எவ்விதக் குற்றங்களுக்காகவும் உள்நாட்டில் தண்டிக்கப்படமாட்டார்கள் என்பதை நாம் அறிவோம். உள்நாட்டு விசாரணை மீதான சர்வதேச மேற்பார்வை வெறும் காலவிரயத்துக்கு மட்டுமே வழி கோலும் என்பதையும் அறிவோம்.

தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தமை மூலம் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். ஆட்சி மாற்றத்தினூடாகப் பாரியதொரு மாற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் நாம் வாக்களிக்கவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் ஒரு மாத காலப்பகுதி தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்திடமிருந்து புதிய மாற்றங்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது என்பதை நிரூபித்து விட்டது. நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளான இராணுவமயமாக்கம், மக்கள் தம் சொந்தக் கிராமங்களிற் குடியேறுதல், காணாமற்போனோர் மற்றும் சட்டவிரோத தடுப்புக்காவல் சம்பந்தப்பட்ட இப்பிரச்சினைகள் தொடர்பில் சிறிசேன அரசாங்கத்தால் குறிப்பிடக்கூடிய எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதியால் முன்மொழியப்பட்ட 100 நாள் நிகழ்ச்சித் திட்டத்தில் இப்பிரச்சினைகள் உள்ளடக்கபடவுமில்லை. அரசியற் தீர்வுக்கான பேச்சுவார்த்தை ஒன்றையேனும் சிறிசேன அரசு மேற்கொள்ளவில்லை.

ஆகவே மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் இலங்கை மீதான தம் விசாரணையை, தகவல் தருவோருக்குப் போதிய பாதுகாப்புடன் சர்வதேச விசாரணையாளர்களால் மேற் கொள்ள இலங்கை வர அனுமதி கோரி, இதன் மூலம் ஒரு முழுமையான முறையான அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கு உதவும் வகையில், ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து சர்வதேச விசாரணைக்கு இட்டுச் செல்லும் வகையில் அவசியமான நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்குமாறும் தங்களை வேண்டுகின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)




## சிறுவனை மோதிய விமான படை வீரருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புன்னாலைக்கட்டுவன் குரும்பசிட்டி பகுதியில் கடந்த 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி சிறுவன் ஒருவரை மோதிய விமானப்படையின் வாகன சாரதிக்கு 13 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் சின்னத்துரை சதீஸ்கரன் நேற்று செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தார்.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவனின் குடும்பத்துக்கு 20 ஆயிரம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறும் நீதவான் பணித்தார். இந்த விபத்தில் ஏழாலை தெற்கைச் சேர்ந்த திருநாவுக்கரசு சுஜீவன் (வயது 16) என்ற சிறுவன் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். விமானப் படை சாரதி கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் இதுதொடர்பான வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்று நேற்று செவ்வாய்க்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## உற்பத்திச் செலவினை குறைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கையின் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கிலும் உற்பத்தி செலவைக் குறைக்கும் வகையிலும் இலகு இயந்திரங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை மானாவாரி காணிகளில் (மழையை மட்டும் நம்பியுள்ள காணிகள்) வீச்சு விதைப்பு முறை காணப்பட்டது. தற்போது இயந்திரம் மூலம் வரிசை விதைப்பு முறையை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

இதற்காக விவசாயிகளுக்கு 50 வீதம் மானிய அடிப்படையில் களை அகற்றும் இயந்திரம் மற்றும் வரிசை விதைப்பு இயந்திரம் என்பவற்றை வழங்கவுள்ளோம்.

இத்திட்டம் குறித்து ஆர்வமுள்ள விவசாயிகள் தமது விவசாய போதனாசிரியர்கள் மூலமும் விவசாய திணைக்களங்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரும்புக் கதவு திருட்டு

(கரணவாய்)

கரவெட்டி வேரூண்டி மயானப் பகுதியில் உள்ள கொல்களத்தில் இருந்த இரும்புக் கதவு திருட்டுப் போயுள்ளது.

30 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தக் இரும்புக் கதவு நேற்றுக் காணாமற் போனமை தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையினால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-3-60)


### திருமண தேவைகளுக்கான கார்




தொடர்புகளுக்கு:-

(C-222)

0773747825, 0212228984

### காணி விற்பனை

அரியாலை AV வீதி செம்மணி ஒழுங்கையில் 6 1/2 பரப்பு காணி பயன்தரு மரங்களுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

(9593)

0779789375, 0775173798


# அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான உறுப்பினர்களுக்கு உடனடி நிவாரணம்

(கொழும்பு)

பல ஆண்டுகளாக பல்வேறு அரசியல் ரீதியான பழிவாங்கல்களுக்கு இலக்கான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள், அங்கத்தினர் களுக்கு நிவாரணங்கள் வழங்கப் படும் என ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் ஆயிரக்க ணக்கான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை அரசியல் ரீதி யாக பழிவாங்கியிருந்தது.

இதன் காரணமாக குறித்த உறுப்பினர்களும் அங்கத்தினர் களும் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்தனர்.



தொழில்களை இழத்தல், வீடு கள் எரிக்கப்பட்டமை உள்ளிட்ட பல் வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப் பட்டிருந்தன.

இந்த சம்பவங்கள் தொடர்பில் ஆயிரக்கணக்கான முறைப்பாடு கள் கட்சித் தலைமையகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

முறைப்பாடு செய்த அனைவ ருக்கும் நீதியை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக் கும் என கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

பழிவாங்கப்பட்ட உறுப்பினர் கள் தொடர்பிலான முறைப்பாடு களை ஆராயும் பணிகள் ஏற்க னவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கருணாதிலக சிங்களப் பத்திரிகையொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பெருந்தொகை வற்வரி மோசடியில் ஈடுபட்ட இருவர் மலேசியாவில் வைத்து கைதாகினர்

வற்வரி மோசடியில் ஈடுபட்ட வர்களை கைது செய்ய, இராணுவ அதிகாரி ஒருவரே நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும் 400 கோடி ரூபா வற் வரி மோசடியில் ஈடுபட்ட இரண்டு நபர்கள் அண்மையில் மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. சிரேஷ்ட இராணுவ அதி காரி ஒருவர் மலே சிய பொலிஸாருடன் இணைந்து மேற் கொண்ட தேடுதல் வேட்டையின் போது இந்தஇருவரும் கைது செய்யப்பட்டனர்.

மொஹமட் முர்சிட் மற்றும் மொஹமட் நசீட் ஆகியோரே இவ் வாறு கைது செய்யப்பட்டனர்.

இந்த இருவரும் மலேசியா விலிருந்து இந்தோனேசியாவின் போனியோ தீவுகளுக்கு சென்று திரும்பும் வரையில் காத்திருந்து மலேசிய பொலிஸார் இருவரையும் கைதுசெய்திருந்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து பல கடவுச்சீட்டுக்களையும் பொலிஸார் மீட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


### காணி விற்பனைக்குண்டு

ஆனைக்கோட்டை பொன்னையா ஒழுங்கையில் மானிப்பாய் வீதியில் இருந்து 200m தூரத்தில் கிணறு, சுற்று மதிலுடன் கூடிய 2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-
077 116 5345
(9602) 021 222 4095

### தேவை

பிரபல நிறுவனத்திற்கு தொலைபேசி எழுதுவினைஞர், கணக்கீடு, கணனி பிரிவுகளுக்கு யுவதிகள் தேவை. உயர் சம்பளம் வசதிகள் வழங்கப்படும்.
076 707 5789

### விற்பனைக்கு

இணுவில் பாலாவோடையில் வீடு வளவு விற்பனைக்கு உண்டு. 2 1/4 பரப்பு, குளியும் உண்டு.
தரகர் தேவையில்லை
(9601) 077 572 0236

### வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(சி-9913)

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

### யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
**The Jaffna Education Centre**

செல்லா தியேட்டருக்கு முன்பாக (மேல் மாடியில்) Spoken English With Grammar "சிங்களம்" Short hand Typing ESOL, IELTS ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம் :- 26.02.2015
பாடமுடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
ஆசிரியை :- இ.லோகநாயகி
(9595) T.P. NO :- 076 669 8953

### Ashok Machineries

**CEMENT BLOCK MAKING MACHINES**




Contact: Niroshana 0718542884

**Ashok Machineries**
011 5 656505, 0114-555770, 0114807586

### இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L/ அரச தொழில்
தொ.இ: B/4167

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 58 செவ் 12 இல்
உயரம்: 182 cm
தகைமை/தொழில்: BSC/ நில அளவையாளர் கட்டார்
தொ.இ: B/4169

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 18 3/4 செவ் 4 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4170

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 39 1/4 செவ் 8 இல்
உயரம்: 169cm
தகைமை/தொழில்:BE, BSC/ தனியார் தொழில் லண்டன் NOT PR
தொ.இ: B/4171

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 100 செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்
தொ.இ: G/4193

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 55
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: ·விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/4194

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 1 1/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: G/4196

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 28 1/2 செவ் 2 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்
தொ.இ: G/1500

### கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### விவசாயபீடம், அறிவியல் நகர், கிளிநொச்சி

**விரிவுரைகள் ஆரம்பமும் புகுமுக மாணவர்களுக்கான, அறிமுக வழிகாட்டல் நிகழ்வும்**

விவசாயபீடத்திற்கு 2013/2014 கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான அறிமுக வழிகாட்டல் நிகழ்வு எதிர்வரும் 09.03.2015 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அறிவியல்நகர் கிளிநொச்சி விவசாயபீடத்தில் ஆரம்பமாகின்றது. அனைத்து புகுமுக மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விடுதி வசதி வழங்கல் 08.03.2015 பி.ப 3.30 மணியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

23.02.2015 பதிவாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமூகத்துடனான உறவு வலுப்பெற்றுள்ளது

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல பெருமிதம்



(கொழும்பு)

சர்வதேச சமூகத்துடனான உறவுகள் வலுப்பெற்றுள்ளதாக பெருந்தோட்ட அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் உலக நாடுகளுடனான உறவுகள் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டது எனவும் எனினும் தற்போது உலக நாடுகளுடன் சிறந்த உறவுகள் பேணப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முக்கியத்துவம் குறைந்த நாடுகளினது தலைவர்களே கடந்த காலங்களில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

குறிப்பாக ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களே அதிகளவில் மகிந்த ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

எனினும், தற்போது உலகின் முக்கிய நாடுகளின் தலைவர்கள் முக்கியஸ்தர்கள் இலங்கைக்கு விஜயம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

கடந்த அரசாங்கம் உலக நாடுகளிடம் பாரியளவில் கடன் பெற்றுக் கொண்டுள்ளது.

புதிய அரசாங்கம் நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதில் கூடுதல் நாட்டம் காட்டி வருகின்றது.

அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் நேரடியாக நிதி உதவிகளை வழங்குவதற்கு முன் வந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# பேசும் படம் - 35



கடந்த ஆண்டு சுதேச விளையாட்டுப் போட்டி அரியாலையில் இடம்பெற்ற போது...

வெற்றி என்பது சாதாரணமானதல்ல.
நீ முயற்சிக்காமல் கிடைப்பதற்கு...

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

T. குகரூபன்,நல்லூர்.
(சார்க் நாடுகளுக்கிடையிலான புகைப்படப் போட்டியில் பரிசு பெற்ற புகைப்படம்)

# ஜனாதிபதியை பாதுகாக்கும் நோக்கில் அரசுடன் இணைந்து கொள்கின்றோம்

## எஸ்.பி.நாவின்ன கூறுகிறார்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பாதுகாக்கும் நோக்கிலேயே அரசாங்கத்தில் இணைந்து கொள்கின்றோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் கைதியாக மாறுவதற்கு இடமளிக்க முடியாது. இதன் காரணமாக அரசாங்கத்தினால் நிறுவப்பட உள்ள தேசிய அரசாங்கத்தின் பதவிகளை ஏற்றுக் கொள்ள கட்சி தீர்மானித்துள்ளது.

உருவாக்கப்படவுள்ள தேசிய அரசாங்கத்தின் தன்மை பற்றி சரியாக இன்னமும் தெரியாது.

குறுகிய அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானங்களை எடுக்கவில்லை.

நாட்டை பற்றி சிந்தித்தே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் நாட்டில் புதிய அரசியல் கலாசாரமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனை வெற்றியடைச் செய்ய உச்ச அளவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என எஸ்.பி. நாவின்ன மேலும் தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# பைஸர் முஸ்தபாவுடன் எனக்கு எவ்வித முரண்பாடுகளுமில்லை

## அர்ஜுன ரணதுங்க கூறுகிறார்

(கொழும்பு)

தனக்கு பைஸர் முஸ்தபாவு டன் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனக்கு அவருடனும் அவருக்கு என்னுடனும் எவ்வித கோபங்களோ, முரண்பாடுகளோ இல்லை. பைஸர் முஸ்தபா பதவி விலகியது, தான் சட்டத்தரணியாக தொடர்ந்து செயற்படுவதற்கே.

மேலும் அரசாங்கத்தின் ஊழல் மோசடிக்கு எதிரான நடவடிக்கை தொடர்பாக எனக்கு தனிப்பட்ட முறையில் திருப்தி அடைய முடியாது. அதற்கு இன்னும் காலம் உள்ளது.

எங்களுக்கு கடந்த அரசாங்கத்தை போன்று பழிவாங்க முடியாது. சட்ட ரீதியான முறையில் செயற் படவே முடியும். அதுவே அவசியமான ஒரு செயற்பாடாகும் அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)



பிரித்தானியாவின் லுப்போக் பிரதேசத்தைச் சேர்ந்த பெற்றோருக்கு நெஞ்சுப்பகுதியும் அடிவயிற்றுப்பகுதியும் இணைந்த நிலையில் பிறந்த இரட்டைப் பெண் குழந்தைகள் 26 மணி நேர சத்திர சிகிச்சை மூலம் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். பத்து மாதங்களே ஆன இக்குழந்தைகளைப் பிரிக்கும் இவ்வகையான சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளமை உலகின் முதல் சம்பவம் என [illegible] தெரிவித்துள்ளனர்.

# மெய்வல்லுநர் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி ம.குணபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, சிறப்பு விருந்தினர்களாக சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அதிபர் ச.சிவகுமார், முன்னாள் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் க. நடராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்த்தர்க்கம்

# வாள்வெட்டில் முடிந்தது குடும்பஸ்தர் மரணம்!

(கண்டாவளை)

மதுபானசாலை ஒன்றில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி கடைசியில் வாள்வெட்டில் முடிவடைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில்உழவனூரில்நடைபெற்றுள்ளது.

இதில் புன்னைநீராவிநாதன் குடியிருப்பைச் சேர்ந்த தர்மலிங்கம் தர்மேஸ்வரன் (வயது-31) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை வாள் வெட்டிற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மதுபானசாலை ஒன்றில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதை அடுத்து அவ்விடத்தில் நின்றவர்கள் அவர்களை சமரசம் செய்து அவரவர் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

அதன்பின்னர் இரவு 9 மணியளவில் நான்கு பேர் கொண்ட குழுவினருடன் ஒரு பகுதியினர் மற்றையவரின் வீட்டிற்கு சென்று வெளியே வருமாறு அதட்டும் தொனியில் அழைத்துள்ளனர்.

இதன்போது வெளியே வந்த மேற்படி குடும்பஸ்தரை வாளால் வெட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதனை அடுத்து அவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார்.

தர்மபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் மேலதிக விசாரணைகளையும் நடத்தினர். (அ-2-263)

# நெற்குவியலில் மோதி விபத்து; ஒருவர் பலி!

## மற்றையவர் காயம்

(கிளிநொச்சி)

நெல்கும்மி மீது மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். மற்றையவர் படுகாயமடைந்துள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் பூநகரி வாடியடிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், கோப்பாய் வடக்கைச் சேர்ந்த குமாரசாமி ஜெகதீஸ்வரன் (வயது 53) என்ற ஆசிரியர் உயிரிழந்தார்.

இவருடன் பயணித்த சிதம்பரப்பிள்ளை மகேந்திரன் (வயது- 70) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கிளிநொச்சியிலுள்ள உறவினரின் வீட்டிற்கு சென்று விட்டு பிரஸ்தாப நபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளை மேற்படி வீதியில் நெல் காயவிடப்பட்டு குவிக்கப்பட்டிருந்தது.

இதனை அறியாத இவர்கள் நெற்குவியலில் மோதுண்டனர். இதனால் வாகனம் செலுத்திய நபர் அவ்விடத்தில் பலியானார். மற்றையநபர் படுகாயமடைந்தார்.

மரண விசாரணையை கிளிநொச்சி மாவட்ட மரண விசாரணை அதிகாரி தா. அரிய ரெத்தினம் மேற்கொண்டார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

காப்பெற் வீதியில் விவசாயிகளால் அறுவடை செய்யப்பட்ட நெல் அண்மைக்காலமாக காயவிடப்படுவதால் பலர் விபத்திற்குள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பாதுகாப்பற்ற இவ்வாறான செயற்பாட்டை பொலிஸார் தடுத்து நிறுத்த முன் வர வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

(அ-2-254-259)




## லொறி தடம்புரண்டு ஒருவர் காயம்

(கண்டாவளை)

மரக்கறிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த லொறி ஒன்றின் முன்பக்கச் சில்லுகள் இரண்டும் காற்று போனமையால் தடம் புரண்டுள்ளது.

இதனால் ஒருவர் காயம் அடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக்காலை 6 மணியளவில் கிளிநொச்சிஏ-9வீதியில்அமைந்துள்ளவைரவகோயிலுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது வாகனத்தில் பயணித்த உதவியாளரான யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த செல்வராசா கலைச்செல்வன் (வயது 39) என்பவர் காயமடைந்தார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-2-259)

# மன்னார் நடைபாதையில் வர்த்தகர்கள் வியாபாரம்

## மன்னார் நகரசபை குற்றச்சாட்டு

(குருமன்காடு)

மன்னார் அரச பேருந்து தரிப்பிடப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் நடைபாதைகளை ஆக்கிரமித்துள்ளமையினால் பொதுமக்கள் தொடர்ந்தும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாசன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்ற வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு இவ்விடயம் தொடர்பில் பல தடவைகள் எடுத்துக்கூறியும் அவர்களுக்கு பல ஆலோசனைகளை கூறிய போதும் அவர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.


குறிப்பாக நடைபாதை வியாபாரிகள் மக்கள் நடந்து செல்கின்ற பாதைகளில் தமது வியாபாரப் பொருட்களை வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

அது மட்டுமன்றி அப்பகுதியில் உள்ள வர்த்தகர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட அளவிற்கு மேலாகவும் தமது வர்த்தக நிலையங்களை விஸ்தரிப்பு செய்து பாதசாரிகளுக்கு தொடர்ந்தும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

குறித்த நிரந்தர வர்த்தகர்கள் தமது கடைகளுக்கு முன்பாகவும் பொருட்களை அடுக்கி வைக்கின்றனர்.

இச்செயற்பாடுகளினால் நாளாந்தம் பேருந்து தரிப்பிடத்திற்கு வரும் ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், குறிப்பாக கர்ப்பிணித்தாய்மார்கள் என பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே இச் செயற்பாடுகள் தொடருமாக இருந்தால் பொது மக்களின் நன்மை கருதி சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலை ஏற்படும் என அவர் தெரிவித்தார். (அ-2-250)



யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பா.உறுப்பினர் சி.சிறிதரனின் "ஜெனீவா தீர்மானமும் மெய்நிலையும் அரசியலும் ஒரு நோக்கு" என்னும் பொத்தக வெளியீட்டு விழா அண்மையில் கிளிநொச்சி கூட்டுறவு கல்லூரி மண்டபத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் கொழும்புக்கிளையின் தலைவர் கே.வி.தவராசா தலைமையில் நடைபெற்ற போது...

# தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவோருக்கு பயிற்சி

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசசபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் மையத்தின் ஏற்பாட்டில் இத்தேர்தல் கடமையில் ஈடுபடும் கண்காணிப்பாளர்கள் 20 பேருக்கான பயிற்சியொன்று இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு முள்ளியவளை தண்ணீரூற்று சந்தியில் உள்ள வெல்கம் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியின் போது தேர்தல் கடமையில் ஈடுபடும் கண்காணிப்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் , தேர்தல் கண்காணிப்பாளர்களின் முக்கியத்துவம் என்ன என்பன குறித்து விளக்கமளிக்கப்படவுள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையத்தின் வடமாகாண துணை இணைப்பாளர் எஸ். ஜெகன் அறிவித்துள்ளார். (அ-2)

# குழு மோதலில் காயமடைந்த மாணவன் மருத்துவமனையில்

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்களுக்குள் ஏற்பட்ட குழு மோதல் காரணமாக மாணவன் ஒருவன் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

பாடசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிக்கான விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இதன்போது சாதாரண தரத்தைச் சேர்ந்த இரு மாணவர் குழுக்களுக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது. இதில் ஒரு மாணவன் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

முத்துலிங்கம் கபிலராஜ் (வயது- 16) என்ற மாணவனே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1078

## மீன் ராஜாவும் நானாபோஷோவும்


நானாபோஷோவின் பாட்டி பெயர் நோக்கோமி. மிகவும் வயதானவள். அவள் தலையில் ஒரு முடிகூட நரைக்கவில்லை. ஆனால், சமீப காலமாக எண்ணெய் தடவாததால் சில முடிகள் உதிர்ந்துவிட்டன. அதற்காக மிகவும் வருந்தினாள்.

ஒருநாள் நானாபோஷோவிடம் சொன்னாள். குட்டிப் பேரனே, எண்ணெய் தடவாமல் என் தலைமுடிகள் உதிர்கின்றன. உன் தாத்தா இருந்தபோது வாங்கித் தந்த எண்ணெய் தீர்ந்துவிட்டது. நீதான் எனக்கு எண்ணெய் கொண்டு வந்து தர வேண்டும் என்றாள்.

பாட்டி, அந்த எண்ணெய் எங்கே கிடைக்கும்? என்று கேட்டான் நானாபோஷோ.

வடக்குத் திசையில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அந்த ஏரியில் ஒரு மீன் ராஜா இருக்கிறது. அந்த மீன் ராஜாவின் பெயர் மெஷீனா மக்வாயி. உலகத்தில் உள்ள எல்லா மீன்களுக்கும் ராஜா. நீ அந்த ராஜா மீனைப் பிடித்து இங்கே கொண்டு வந்தால், நமக்கு நிறைய எண்ணெய் கிடைக்கும் என்றாள் பாட்டி.

வெற்றியுடன் வருவதற்கு நானாபோஷோவை ஆசீர்வதித்தாள் பாட்டி. மீன் பிடிக்கத் தூண்டிலும் படகும் வேண்டும். நானாபோஷோ ஒரு மரத்தை வெட்டி படகு செய்தான். ஒக் மரக்கிளையால் துடுப்பு செய்தான். பாட்டி, கயிறும் தூண்டிலும் கொடுத்தாள்.



நானாபோஷோ நதி வழியே வடக்குத் திசையில் படகைச் செலுத்தினான். கடைசியில் ஒருபெரிய ஏரியை அடைந்தான். ஏரியின் நடுவில் படகை நிறுத்தினான். தூண்டில் முள்ளில் இரையைக் குத்திவைத்து, ஏரியில் எறிந்த படியே பாடினான்... மெஷீனா மக்வாயி மீன் ராஜாவே, தூண்டில் முள் வருவதைப் பார்க்கவில்லையா?

முள்ளின் முனையில் இருக்கும் இரையைக் கவனிக்கவில்லையா? உடனே வந்து இரையை விழுங்கு என்று பாடினான்.

மீன்களின் ராஜாவான மெஷீனா மக்வாயி, ஏரியின் அடியில் படுத்தபடி பாட்டைக் கேட்டது. தன்னை அழைத்துப் பாடுவது யார் என்று அறிய, மந்திரி மீனை ஏரியின் மேற்பகுதிக்கு அனுப்பியது. மந்திரி மீனைப் பார்த்த நானாபோஷோ, உன் ராஜாவுக்குத் தைரியம் இருந்தால், தூண்டில் முள்ளைக் கடிக்கச் சொல் பார்ப்போம் என்றான். மந்திரி மீன் கீழே சென்று ராஜாவிடம் செய்தியைச் சொன்னது. அதைக் கேட்டுக் கடுங்கோபம் கொண்டது மீன் ராஜா. வாலைச் சுழற்றி தண்ணீரில் அடித்தது. ஏரியே கொந்தளித்தது. ஆவேசமாக உருண்டு புரண்டவாறு மேலே வந்தது. வந்த வேகத்தில் நானாபோஷோவின் படகு ஆடித் தத்தளித்தது. குகை போன்ற வாயைத் திறந்தவாறு, மீன் ராஜா ஆவேசமாகப் பாய்ந்து வந்து, நானாபோஷோவையும் படகையும் விழுங்கிவிட்டது. அடுத்த நொடி, மெஷீனா மக்வாயி வயிற்றுக்குள் கிடந்தான் நானாபோஷோ. எங்கும் இருட்டு. எதையும் பார்க்க முடியவில்லை.

எங்கோ ஓர் ஓசை கேட்டது... டொம் டமார்! டொம் டமார்! டொம் டமார்! மீன் ராஜாவின் இதயத்துடிப்புதான் அது என்று நானாபோஷோவுக்குப் புரிந்தது. ஓசை கேட்ட இடத்தில் துடுப்பால் ஓங்கி அடித்தான். மீன் ராஜா செத்துவிட்டது.

அப்போது கர்கர்... கர்கர் என்று ஏதோ சுரண்டுகிற சத்தம். எப்படியோ ஓர் அணில், மீன் ராஜாவின் வயிற்றுக்குள் வந்துவிட்டது. அது வெளியே செல்வதற்காக சுரண்டிச் சுரண்டி, ஒரு வழியை உருவாக்கப் பார்த்தது.

நானாபோஷோ அப்போது வெளியிலிருந்து வரும் வேறொரு ஓசையையும் கேட்டான். டக் டக் டக் டக்.... அவன் கூர்ந்து கவனித் தான். வெளியிலிருந்து ஒரு கடல் காகம், மீன் ராஜாவைக் கொத்தியது.

அணில் உள்ளே சுரண்டியும், கடல் காகம் வெளியே கொத்தியும் ஏற்படுத்தியதுளை வழியே, நானா போஷோ வெளியே வந்தான். அணிலுக்கும் காகத்துக்கும் நன்றி சொன்னான்.

அவர்கள் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். இறந்து போன மீன் ராஜாவை, ஒரு பெரிய மரப்படகில் ஏற்றிக் கட்டினார்கள். ஏரியிலிருந்து நதிக்கு வந்து நதியிலிருந்து வீட்டை நோக்கிப் படகைச் செலுத்தினார்கள். நானா போஷோ மகிழ்ச்சியாகப் பாடினான்.

ஐலசா... ஐலசா...

மெஷீனா மக்வாயிக்கு ஐலசா...! நோக்கோமி பாட்டி எண்ணெய் தடவட்டும் அணிலுக்கும் காகத்திற்கும் ஐலசா..!

மூவரும் வீட்டை அடைந்தார்கள். நோக்கோடி பாட்டி, மீன் ராஜாவின் உடலை வெட்டித் துண்டுகள் ஆக்கினாள். ஒரு பாத்திரத்தில் வேக வைத்து, எண்ணெயாக மாற்றினாள். கிடைத்த எண்ணெய்யை ஆயிரம் புட்டிகளில் ஊற்றினாள். தினமும் அதைத் தலையில் தடவிக் கொண்ட பாட்டி, ஊரில் இருப்பவர்களுக்கும் கொடுத்தாள். அவர்கள், அந்த எண்ணெய்யைத் தலையில் தடவிக் கொண்டார்கள். பிறகு, அந்த ஊரில் யாருடைய தலை முடியும் உதிரவே இல்லை!

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

02.2015
25

- 1797 - வில்லியம் டேட் தலைமையிலான 1000-1500 போர் வீரர்களைக் கொண்ட படைகள் தமது பிரித்தானியா மீதான கடைசிப் படையெடுப்பை அடுத்து சரணடைந்தனர்.
- 1836 - சாமுவேல் கோல்ட் சுழல் துப்பாக்கிக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1837 - தோமஸ் டெவன்போர்ட் மின்சாரத்தில் இயங்கும் மோட்டாருக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1921 - ஜோர்ஜியாவின் தலைநகர் திபிலீசி ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் படைகளினால் கைப்பற்றப்பட் டது.
- 1925 - சோவியத் ஒன்றியத்திற்கும் ஜப்பானுக்குமிடையில் தூதரக உறவு ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 -அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் குடியுரிமையைப் பெற்றார்.
- 1945 -இரண்டாம் உலகப் போர்: துருக்கி ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1948 - செக்கோசிலவாக்கியாவின் ஆட்சியை அந் நாட்டு கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றியது.
- 1956 - சோவியத் தலைவர் நிக்கிட்டா குருசேவ் ஜோசப் ஸ்டாலினின் ஆட்சிக்கால நிர்வாகத் தைக் கண்டனம் செய்தார்.
- 1980 - சூரினாமில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.
- 1986 - பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பேர்டினனட் மார்க் கோஸ் மக்கள் புரட்சியை அடுத்து ஆட்சியைக் கைவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார். கொரசோன் அக்கீனோ ஜனாதிபதியானார்.
- 1988 - மாதிரி அணுவாயுதத்தைச் சுமந்து சென்ற இந்தியாவின் முதல் ஏவுகணை பிருதிவி ஏவப்பட்டது.
- 2006 - உலகின் மக்கள் தொகை 6.5 பில்லியனைத் தாண்டியது.
- 2007 - ஈசாவின் ரோசெட்டா விண்ணுளவி (Rosetta Space Probe) முதன் முதலாக செவ்வாய்க் கோளை 150 மைல் உயரத்தில் மிக அருகே சுற்றிவந்து அதன் சுழல்வீச்சில் (Mars Fly-by) அப்பால் எறியப்பட்டது.

**பிறப்புகள்**

- 1915 - எஸ். ராஜரத்தினம், சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் (இ. 2006)

**இறப்புகள்**

- 1950 - ஜோர்ஜ் மினோட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1885)
- 1971 - தியோடர் சிவெட்பேர்க், நோபல் பரிசு பெற்ற சுவீடன் வேதியியலாளர் (பி. 1884)
- 1999 - கிளென் சீபோர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (பி. 1912)
- 2004 - நாகிரெட்டி, இந்திய திரைப்பட தயாரிப்பாளர், பத்திரிகையாளர் (பி. 1912)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்
## வாழ்க்கை வரலாறு

கேள்வி:- உங்கள் கனவில் அடிக்கடி வரும் பெண்?

பதில்:- காளி.

கேள்வி:- உங்கள் வீட்டில் நீங்கள் அதிக நேரம் செலவிட விரும்பும் இடம்?

பதில்:- பூஜை அறை.

கேள்வி:- நீங்கள் பத்திரப்படுத்திப் பாதுகாக்கும் பொருள்?

பதில்:- "முள்ளும் மலரும்" படம் பார்த்துவிட்டு டைரக்டர் பாலசந்தர் எனக்கு எழுதிய கடிதம்!

கேள்வி:- டைரக்டர் பாலசந்தரிடம் இன்றும் நீங்கள் மரியாதை காட்டுவது அவர் உங்களை அறிமுகப்படுத்தினார் என்ற ஒரே காரணத்தினாலா?

பதில்:- இல்லை. அவர் ஒரு மகத்தான மனிதர் என்பதால்தான!

கேள்வி:- உங்களால் நன்றிக்கடன் செலுத்த முடியாமல் உங்களுக்குக் கிடைத்த உதவி?

பதில்:- என்னைப் பெற்றெடுத்ததன் மூலம் என் தாய் செய்த உதவி.

இவ்வாறு ரஜினி பதில் அளித்தார். சிறந்த நடிப்புக்காக ரஜினி பல விருதுகள் பெற்ற படம்

சிறந்த நடிப்புக்காக ரஜினிகாந்த் பல விருதுகளை பெற்ற படம் **"நல்லவனுக்கு நல்லவன்."**

தெலுங்கில் வெளிவந்த "தர்மாத்மூடு" என்ற படத்தின் கதையை வைத்து, ஏவி.எம். தயாரித்த படம் இது. திரைக்கதை, வசனத்தை விசு எழுத, எஸ்.பி.முத்துராமன் டைரக்ட் செய்தார்.

வாலி, வைரமுத்து, கங்கை அமரன், முத்துலிங்கம், நா.காமராசன ஆகியோர் பாடல்களை எழுத, இளையராஜா இசை அமைத்தார்.

**கதை**

படத்தின் தொடக்கத்தில், அடிதடியே வாழ்க்கை என்று கருதும் இளைஞன் கேரக்டரில் அறிமுகமாகிறார், ரஜினி. அவரை தன் நற்பண்புகளால் கவர்ந்து, மனைவியாகிறார், ராதிகா.

ஒரு பீடி சோறு சாப்பிட்டாலும், அது உங்கள் உழைப்பில் கிடைத்ததாக இருக்க வேண்டும் என்று ரஜினியிடம் கூறுகிறார், ராதிகா. அது ரஜினியின் போக்கை மாற்றி விடுகிறது.




ரஜினி- ரதிகா படம் -நல்லவனுக்கு நல்லவன்

அவருடைய கடும் உழைப்பும், நேர்மையும் ஒரு மில் அதிபரை (விசு) கவர, மில் நிர்வாகியாகிறார், ரஜினி.

அந்த மில் முதலாளிக்கு ஒரு உதவாக்கரை மகன் (கார்த்திக்). அவரைத் திருத்த முயற்சிக்கிறார், ரஜினி.

காலச்சக்கரம் வேகமாக சுழல்கிறது. இப்போது ரஜினி, நடுத்தர வயது மனிதர். அவருக்கு ஒரு அழகான மகள் (துளசி). அவள் கார்த்திக பார்வையில் விழ, காதல் அரும்பி, பெற்றோர் எதிர்ப்பை மீறி கல்யாணத்தில் முடிகிறது.

மகளின் திருமணத்தால் மனம் உடைந்த ராதிகா, உயிர் துறக்கிறார். கார்த்திக் உயிருக்கு, அவருடைய நண்பர்களாலேயே ஆபத்து ஏற்படுகிறது. தக்க நேரத்தில் ரஜினி அவரைக் காப்பாற்றுகிறார். கார்த்திக் திருந்துகிறார். சிதறிய குடும்பங்கள் ஒன்று சேருகின்றன.

**மூன்றுவித தோற்றங்கள்**

ரவுடி இளைஞன், நடுத்தர வயதுக்காரர், வயதானவர் என்று, மூன்று காலக்கட்டத்தையும் ரஜினி தனது பண்பட்ட நடிப்பில் துல்லியமாக பதிவு செய்த படம் இது. **"சிட்டுக்கு - சின்ன சிட்டுக்கு ஒரு சிறகு முளைத்தது"** என்று, ஓடிப்போன மகளைப்பற்றி ரஜினி பாடும் காட்சி, மிகச்சிறப்பாக அமைந்திருந்தது.

பட வாய்ப்புகள் சரிவர அமையாமல் இருந்த காலக்கட்டத்தில், இந்தப் படத்தின் மூலம் கார்த்திக் மீண்டும் பிசியானார்.

மற்றும் ஒய்.விஜயா, வி.கே. ராமசாமி, ஒய்.ஜி.மகேந்திரன் ஆகியோரும் இப்படத்தில் நடித்திருந்தனர்.

**விருதுகள்**

சிறந்த நடிப்புக்காக, பிலிம்பேர், சினிமா எக்ஸ்பிரஸ் பரிசுகள் உள்பட பல விருதுகள் இப்படத்தின் மூலம் ரஜினிக்கு கிடைத்தன.

22-10-1984இல் வெளிவந்த இப்படம் 154 நாட்கள் ஓடியது.

**நான் சிகப்பு மனிதன்**

பூர்ணசந்திரராவ் தனது லட்சுமி புரொடக்ஷன்ஸ் சார்பில் தயாரித்த படம் **"நான் சிகப்பு மனிதன."**

இது, **"ஆஜ்கி ஆவாஸ்"** என்ற இந்திப்படத்தின் தமிழாக்கம். திரைக்கதை, வசனம் எழுதி இயக்கினார், எஸ்.ஏ.சந்திரசேகரன். வாலி, கங்கை அமரன், வைரமுத்து, புலமைப்பித்தன், மு.மேததா ஆகியோர் எழுதிய பாடல்களுக்கு இசை இளையராஜா.

இந்தப் படத்தில் ரஜினிக்கு ஜோடி அம்பிகா. மற்றும் எம்.என். நம்பியார், சத்யராஜ், தேங்காய் சனிவாசன், சுமதி, வாணி, ரேணுகா ஆகியோரும் நடித்தனர்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து- 87**

...ஒனக்கும் சேத்து அழுதுட்டா ஆத்தா அதே போதும்ன்னு நெனைக்கிறியா? நீ வகுத்துக்குள்ள வளந்து வரல மகனே என் வைராக்கியத்துல வளந்து வந்திருக்க.

பொழைச்சுக் காமிக்கணுமடா இந்த பூமியில.

அஞ்சாம் நாளே காஞ்சு விழுந்து போச்சப்பா ஒந் தொப்புழ்கொடி.

ஆனா எந்த நாள்லயும் விழுந்திரக் கூடாதுடா ஒன் வைராக்கியம்.

முள்ளுல கெடக்குடா மகனே ஆத்தா முந்தான வளந்து ஆளாகி வந்து எடுத்துவிடு.

கையக் கால ஒதறிக் காடாவெளக்கு வெளிச்சத்துல சிரிக்குது பிள்ள.

மொதலக்கம்பட்டி ஆளுக குடுத்த பேறுகாலச் செலவுலயிருந்து காயங்கருப்பட்டி சேக்குறாக ரங்கம்மாவும் பவளமும்.

மஞ்சள் -கடுகு- சுக்கு- மௌகு- திப்பிலி- தேசாவதாரம்- ஓமம் -சதகுப்ப- சித்தரத்த-வசம்பு- பெருங்காயம் வால்மௌகு எல்லாத்தையும் வறட்டோட்டுல போட்டு வறுத்தாக.

ஒரல்ல போட்டு நொறுங்க இடிச்சாக.

ஒரு சிரட்டை மேல எளந்துணி போட்டு இடிச்சதப் போடடுச் சலிச்சாக.

அரை வீச வெள்ளப்பூட எடுத்துப் பல்லு பல்லாக எரிச்சு எளஞ்சூட்ல நல்லெண்ணெ விட்டு அரைவேக்காடா வதக்குனாக.

இடிச்ச பொடிய அதுல கொட்டி ஒடைச்ச கருப்பட்டிய உள்ள போட்டு பெரட்டு பெரட்டுன்னு பெரட்டியெடுத்தாக ஒரு பஞ்சாமிர்தப் பதத்துக்கு வந்ததும் மாமியாளுக்கு மருமக ஊத்துற மாதிரி பட்டும் படாம நெய் விட்டு விளாவி ஒரே பதமா எறக்கி உறியில தூக்கி வச்சுட்டாக.



உறியில வச்சுட்டா எறும்பு கிறும்பு ஏறாது. நாய் பூன நக்காது.

எப்பப்ப வேணுமோ அப்பப்பப் பிள்ளப் பெத்தவ எடுத்துத் தின்னுக் கிட்டேயிருக்க வேண்டியதுதான்.

அத்தன சக்தி அந்த காயங் கருப்பட்டிக்கு.

ஊறாத பாலையும் இழுத்து ஊத்திப்படும் ஊத்தி.

யாரும் நெனைக்கல.

அஞ்சாம நாளு குளுர் காய்ச்சல் வந்திருச்சு பிள்ளைக்கு.

மழையில நனைஞ்ச பிள்ளைக்கு மார்ச்சளி புடிச்சிருந்துச்சு.

அதான் காய்ச்சல் வந்திசருச்சு.

இன்னக்கி நாளைக்குள்ள எறங்கிரணும் காய்ச்சல். இல்லாட்டி ஜன்னி வந்தாலும் வந்திரும்.

பிள்ளைக்கு இப்பவே பத்துப் போட்டாகனும்.

இடுப்புல வறட்டோட்ட வச்சு அளவாக் கேப்ப மாவ வச்சா.

வேணுங்கிற தண்ணி விட்டுக் கெட்டிப்படாமக் கிண்டுனா.

களிப்பதத்துக்கு அது கூடிவாரப்ப ஒரு சிட்டிகை குங்குமத்தப் போட்டுக் கொழ கொழன்னு எறக்குனா.

ராமர் அணிலுக்குக் கோடு போட்டார்ன்னு சொல்ற மாதிரி அதை எடுத்து பிள்ள உச்சந்தலையில மூணு வெரலு இழுகிவிட்டா.

நெத்தியில பத்துப் போட்டா அடிக்காது வரைக்கும் இழுத்து இழுகி விட்டா.

ரெண்டு நாளா சூடு கொஞ்சம் கொறையுதே தவிர அடங்கல.

எம்பிள்ளைக்கு ஒண்ணும் ஆகிராதே...?

பெத்த வகுறு நடுங்குது கருவாச்சிக்கு.

பிள்ளைக்கு ஒண்ணும் ஆகல.

அவளுக்குதான் ஒண்ணும் ஆகிப் போச்சு.

காயச்சல் வந்த பிள்ள தாய்மார்புல வாய் வைக்காதில்லையா ரெண்டு நாளாப் பிள்ள குடிக்காததுனால கட்டிப் போச்சு மார்பு கருவாச்சிக்கு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## புளிமா/விலிம்பிக்காய்



Botanical Name-Averrhoa bilimbi
Family-Oxalidaceac
Engl-Tree Sorrel
Sinh-Bimbiri

சிறுமரம். 10மீற்றர் முதல் 15 மீற்றர் உயரமாகவும் கிளைத்துத் தழைத்தும் வளரும். கூட்டிலை இறகுவடிவானது.சிற்றிலைகள் 5-17 இணைகள். அடிப்புறம் நுண்மயிர் காணப்படும். 4-5 செ.மீற்றர், 2.5-3 செ.மீற்றர் நீள் முட்டை வடிவானது. நுனிவளர் பூந்துணர் அடிமரத்திலும் கிளைகளிலும் தண்டிலும் நேரடியாக உண்டாகும். பூக்கள் ஒழுங்கானது. ஐந்தடுக்கானது. சிறு இலைபோன்ற 5 புல்லிகள் திருகு இதழமைப்பில் காணப்படும். சதைக்கனி, பழுக்காது மிகுந்த புளிப்புள்ளது.

வறண்ட பிரதேசங்களில் இதன் பரம்பல் அதிகம் காணப்படும்.

### 100 கிராம் பழத்திலுள்ள சத்துக்கள்

புரதம்-0.5கிராம், கொழுப்பு-0.3 கிராம், நார்ப்பொருள்-1.0 கிராம், காபோவைதரேற்று-3.5 கிராம், கல்சியம்-15மில்லிகிராம், பொஸ்பரஸ்-10 மில்லிகிராம், இரும்பு-1.2 மில்லிகிராம், தயமின்-0.09 மில்லிகிராம், ரைபோபிளேவின்- 0.04 மில்லிகிராம், நியாசின்-32 மில்லிகிராம், உயிர்ச்சத்து சி-44 மில்லிகிராம், பொட்டாசியம்-130 மில்லிகிராம், கரோட்டீன்- 18 மைக்ரோ கிராம்.

இப்பழத்தின் சாறு தாகத்தை தணிக்கும். காய்கறியாகவும் பயன்படும். ஊறுகாயாக தயாரித்தும் பயன்படுத்தலாம். இதன் பழங்களிலிருந்து சாறு எடுத்து சர்பத் தயாரித்தும் பயன்படுத்தலாம்.

அதன் காயை புளிக்குப் பதில் கறிவகைகளுக்கு சேர்ப்பது நல்லது. பழப்புளி அதிகுருதி அமுக்கம் போன்றவற்றை கூட்டும் இயல்புடையது.பழுத்த பழத்தின் சாறு ஒரு பங்கு அதேயளவு நீர், சீனி 3 பங்கு சேர்த்து சிறு தீயிட்டு எரித்து மணப்பாகு செய்து அதில் ஒரு மேசைக் கரண்டி வீதம் காலை, மாலை கொடுக்க சுரதாகம், முரசுகரைதல் நீங்கும். சிறந்த மென்பானமாகவும் பயன்படுத்தலாம்.

### விலிம்பி பச்சடி

விலிம்பிக்காய்-250 கிராம், கெட்டித்தயிர்-250 மில்லி கிராம், பச்சரிசி-6 தேக்கரண்டி, பொடியாக அரிந்த வெங்காயம்- சிறிய கப், தேங்காய் துருவல்-அரை மூடி, தக்காளி 3 நீளத்தில் அரிந்தது, கறி வேப்பிலை தேவையான அளவு, தேவையான உப்பு, கடுகு ஒரு தேக்கரண்டி, கடலைப்பருப்பு 2 மேசைக்கரண்டி

விலிம்பிக்காயை அரவல் நொருவலாக அரைத்துதயிரை விலிம்பிக்காய் கலவையில் போடவும். உப்பையும் தூள் செய்து சேர்த்து, வாணலியில் கடலைப்பருப்பு, கடுகு போட்டு சிவந்து வெடித்ததும் வெங்காயம் போட்டு வதக்கவும். பின்பு அரிந்த கறிவேப்பிலை, தக்காளி போட்டு வதக்கி விலிம்பிக்காய் கலவையில் போடவும். தேங்காய், பச்சரிசி இவற்றைக் கரகரப்பாக அரைத்து மேற்படி விலிம்பிக்காய் கலவையில் போட்டு கிளறிவிடவும். இதனை சாதத்துடன் சேர்த்து சாப்பிடவும். உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். இரத்த விருத்தி உண்டாகும். பசியின்மை, சுவையின்மை, வயிற்றுப்பொருமலுக்கு சிறந்ததாகும்.

மூலநோய் உள்ளவர்கள் வாரத்தில் 3 நாட்கள் விலிம்பிக்காய் கறி சமைத்துச் சாப்பிடலாம்.

### விலிம்பிக்காய் ஊறுகாய்

விலிம்பிக்காய்-500 கிராம், கடுகுப்பொடி-25 கிராம், மிளகாய்ப் பொடி-25 கிராம், மஞ்சள் பொடி - ஒரு மேசைக்கரண்டி, உப்பு-60 கிராம், நல்லெண்ணெய்-200 மில்லி.

வெட்டிய விலிம்பிக்காயை பாதியளவு வேகவைத்து நீரை வடித்து அதைப் பாத்திரத்தில் வைத்து அப்படியே சூரிய வெப்பத்தில் உலர விட வேண்டும். பிறகு கடுகுப்பொடி, மிளகாய்ப்பொடி, உப்பு, மஞ்சள் பொடி இவைகளை விலிம்பிக்காய்களின் மீது தடவி ஜாடியில் அடுக்கி வைத்து அதன் மீது காயவைத்து ஆறிய எண்ணெய்யை ஊற்ற வேண்டும். 3 வாரங்கள் வரை வைத்துப் பாவிக்கலாம்.

உணவுக்கால்வாய்ப் பகுதியின் ஜீரணசக்தியை அதிகரிக்க வைப்பதோடு வயிற்றுப்பிசம் நீங்கும். முரசிலிருந்து இரத்தம் கசிதலும் குணமாகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மீரியாபெத்தையில்

# புதிய அரசின் 100 நாள் திட்டத்திற்குள் 75 குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பு

### சிவஞானசோதி தகவல்

பதுளைமாவட்டத்தில் மீரியாபெத்தைமண்சரிவு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 75 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான முன்னேற்பாடுகளை பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி ஏற்பட்ட மண்சரிவுஅனர்த்தத்தினால் 75 குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளன. நூறுநாள் வேலைத்திட்டத்தின் கீழ் மண்சரிவு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 75 குடும்பங்களுக்கு வசதியான தனிவீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் காணியோடும் காணி உரித்துரிமையுடனும் கூடிய கௌரவமாக வாழக்கூடிய தனிவீடுகளை வழங்குவதாகும். இத்தகைய வீடுகள் காற்றோட்டம், வெளிச்சம், மின்சாரம், குடிநீர் வசதி மற்றும் மலசலகூடவசதிகளைக் கொண்டிருப்பதோடு அவர்கள் பிரத்தியேக வாழ்க்கையை நடத்தக் கூடியதாகவும் இருக்கும். நூறுநாள் வேலைத்திட்டத்தின் கீழ், 7 பேர்ச் காணியில் 550 சதுர அடிப்பரப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனிவீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச் சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். மேலும் காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் உரித்துரிமையுடன் கூடிய நிரந்தர வீடுகளை பெற்றுக்கொடுப்பதுடன் எவராலும் வெளியேற்றப்பட முடியாத பாதுகாப்புடன் கூடியவீட்டினை மலையக மக்களுக்கு வழங்கி கௌரவமான வாழ்வினைப் பெற்றுக்கொடுப்பதாகும்.

2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம 20 ஆம் திகதி, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பழனிதிகாம்பரத்தின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதனை அமுல்படுத்துவதற்கான திட்டம் கலந்துரையாடப்பட்டு முடிவு செய்யப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபை இந்நிகழ்ச் சித்திட்டத்திற்கான வடிவமைப்பினை பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சுடனும் ஏனைய நிறுவனங்களான பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம், தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம், இலங்கை, இராணுவம், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் மற்றும் பயனாளிகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடி அவர்களின் அபிப்பிராயங்கள் உள்ளடங்கலாகத தயாரித்துள்ளது.

இந்த மலையக வீட்டுத் திட்ட முன்னெடுப்பானது கிராம எண்ணக்கரு அடிப்படையில் அமைந்துள்ளதுடன் உள்ளகவீதிகள், குடிநீர், மின்சாரம்,பாடசாலை, சுகாதார நிலையங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் சிறுவர் காப்பகம் என்பவற்றை உள்ளடக்கியதாகவும் காணப்படும். ஆரம்பத்தில் அம்பிட்டிகந்தை பெருந்தோட்டத்திலுள்ள மல்வின் பிரிவில் இவ் வீடுகளைஅமைப்பதற்கான இடம் தெரிவுசெய்யப்பட்டபோதும் இது மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத இடமாகக் காணப்பட்டது.

பெருந் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிரு த்தஅமைச்சர் பழனிதிகாம்பரத்தின் தலைமை யில் அலுவலர்கள் குழு பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடி பதுளை மாவட்டத்தில் மஸ்கெலியா பெருந்தோட்டத்தில் பூனாகலை தோட்டத்தில் பூனா கலை பிரிவில் இவ்வீடுகளை அமைபபதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டது. இது மக்களால் பெரிதும் விரும்பப்படும் இடமாகக் காணப்படுவதுடன், தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தினால் இவ்விடமானது புவியியல் ஸ்திரத்தன்மையுடையதாகவும், அனர்த்த பாதிப்புகள் அற்ற நிலமாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்டமக்களின் அபிலாஷைகள் மற்றும் புவியியல் தொழில்நுட்பவிடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

ஒருவீட்டினை அமைப்பதற்கான கிரய மதிப்பீட்டுத் தொகை ரூபா 1.2 மில்லியன்களாகும். இதற்கு மேலதிகமாக ஏனைய வசதிகளான உள்ளக வீதிகள், குடிநீர், மின்சாரம், பாடசாலை, சுகாதார நிலையங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் சிறுவர் காப்பகம் என்பவற்றை வழங்கும் வகையில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. நூறுநாள் வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான முன்னோடியான நிகழ்வுகள் (Ground breaking) எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி காலை 10 மணிக்கு பதுளை மாவட்டத்தில் மஸ்கெலியா பெருந்தோட்டத்தில் பூனாகலை தோட்டத்தில் பூனாகலை பிரிவில் நடைபெறும் எனபெருந்தோட்ட உட்கட்டமைப்புஅபிவிருத்திஅமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி குறிப்பிட்டார்.

பெருந் தோட்டஉட்கட்ட மைப்பு அபிவிருத்தி அமைச்சானது இந்த மலையக வீட்டுத்திட்ட முன்னெடுப்பை துரிதகதியில் அமுல் படுத்தி 6 மாதகாலத்தினுள் பூர்த்தி செய்து கையளிப்பதற்கு எதிர்பார்க் கின்றது என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (இ)

## நேர்முகத் தேர்வு

நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 இற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் அமைந்துள்ள தாவரவியல் துறை விரிவுரை மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது க.பொ.த.(உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த.(சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் கற்கைநெறியை மேற்கொள்ள விரும்பும் மொழியில் திறமைச் சித்தியுடன் கணிதம்/எண்கணிதம் மற்றும்ஆங்கிலமொழிஉட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மொழி மூலம்: தமிழ்(யாழ்ப் பாண நிலையத்தில்)கற்கைநெறிக் கட்டணம்: ரூபா 16 ஆயிரம் விரிவுரைகளுடன் சுவய வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.

இக்கற்கைநெறிக்கு இதுவரை விண்ணப்பிக்காத அடிப்படை தகைமையுள்ளவர்களும் மேற்படி நேர்முகத்தேர்வுக்கு பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதி மற்றும் போட்டோபிரதிகளுடன்சமுகமளிக்கமுடியும்.விண்ணப்பப்படிவக் கட்டணம் 200 ரூபாவாகும்.

தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், விவாகப் பதிவு அத்தாட்சிப் பத்திரம் (திருமணமான பெண்களுக்கு), கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்,சேவைக்காலச் சான்றிதழ் (பணிபுரிவோருக்கானது)என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இந்தியாவுக்கு எவ்வாறு நட்பு நாடாகும்

## சீமான் கேள்வி


இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளும் இலங்கை எவ்வாறு இந்தியாவின் நட்பு நாடாகும் என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வியெழுப்பியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்ட வடகாடு அருகிலுள்ள புள்ளான் விடுதியில் நேற்று இடம் பெற்ற விழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களை எல்லை தாண்டி வரக்கூடாது என இலங்கை அரசாங்கம் நிர்ப்பந்தித்து வருகின்றது.

கடல் மார்க்கத்தில் எல்லை தாண்டி வரக்கூடாது என சொல்வதற்கு யாருக்கும் உரிமை இல்லை, அத்துடன் கடலுக்குள் சென்ற பிறகு எல்லையும் பார்க்க முடியாது என அவர் தெரிவித்தார்.

மேலும், தமிழக மீனவர்களை கைது செய்து தொடர்ந்தும் சித்திரவதைப்படுத்தி வருகின்றது, இந் நிலையில் இலங்கையை எவ்வாறு நட்பு நாடாக முடியும் என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-5)




# பிரதமர் இலங்கை செல்வதற்குமுன் முதல்வருடன் ஆலோசிக்க வேண்டும்

## தொல்.திருமாவளவன் வலியுறுத்து

**பாரதப் பிரதமர் நரேந்திமோடி இலங்கை செல்வதற்கு முன் தமிழக முதல்வருடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.**



இது குறித்து அவர் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில், இந்தியப் பிரதமர் இலங்கைக்குப் போவதற்கு முன்னர்

*இலங்கை இரகசிய முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்!

*இலங்கை இராணுவத்தால் பறிக்கப்பட்ட ஈழத் தமிழரின் நிலங்கள் மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும்!

* தமிழக மீனவர்கள் அச்சமின்றி மீன்பிடிக்க நிரந்தரத் தீர்வு எட்டப்படவேண்டும்!

இந்தப் பிரச்சினைகள் குறித்து இலங்கைக்குப் போவதற்குமுன் இந்தியப் பிரதமர், தமிழ்நாட்டு மக்களின் கருத்துகளை அறியும் வகையில் தமிழக முதல்வரோடு கலந்தாலோசிக்க வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வலியுறுத்துகிறது.

தமிழக முதல்வர் இதற்கென அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி ஈழத் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான கருத்தொற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# பட்ஜெட்டுக்கு வராமல் விடுப்பில் சென்ற ராகுல்

(புதுடில்லி)

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி, நேற்று முன்தினம் தொடங்கிய இந்திய நாடாளுமன்றத்தின் வரவு செலவுக் கூட்டத் தொடருக்கு வராமல், விடுமுறையில் சென்று விட்டார் என்று செய்திகள் கூறுகின்றன.



முக்கிய கூட்டத் தொடரில் கலந்துகொள்ளாமல் அவர் விடுமுறையில் செல்வது பாஜக மற்றும் வேறு சிலகட்சிகளின் விமர்சனத்தைத் தூண்டியிருக்கிறது. (இ-5)

பாரதச் செய்தி

## அபாயகரமான செயலை செய்ய வேண்டாம்; ஹுசைனிக்கு ஜெயலலிதா அறிவுரை கடிதம்



அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீண்டும் தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்க வேண்டும் என்ற பிரார்த்தனைக்காக தன்னைத் தானே சிலுவையில் அறைந்து கொண்ட கராத்தே வீரர் ஹுசைனிக்கு, ஜெயலலிதா அறிவுரை வழங்கியுள்ளார்.

இது குறித்து ஜெயலலிதா, ஹுசைனிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், இனியும் இதுபோன்ற அபாயகரமான செயலைச் செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், உங்களை வருத்திக் கொண்டு சிலுவையில் அறைந்து கொண்ட செயல் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. உங்களது அக்கறைக்கு நன்றி. எனினும் இது போனற் செயல்களில் ஈடுபட வேண்டாம். உங்கள் உடல் நலனை கவனித்துக் கொள்ளவும் என்று தெரிவித்துள்ளார். (இ-5)

# அன்னை தெரேசாவின் குறிக்கோள் கிறிஸ்தவ மதமாற்றம்-ஆர்.எஸ்.எஸ்

மத மாற்றத்தை சேவையின் பெயரில் மேற்கொள்ளும்போது, அந்த சேவைக்கான அடிப்படை ஆதாரமே மதிப்பற்றதாகிவிடுகிறது.

அன்னை தெரேசாவின் சேவையின் பின்னணியில் கிறிஸ்தவ மதமாற்றமே குறிக்கோளாக இருந்ததாக ஆர்.எஸ்.எஸ்.தலைவர் மோகன் பகவத் கூறியுள்ளார்.

அவரது இந்த கருத்து பல்வேறு தரப்பினர் மத்தியிலும் பெருத்த சர்ச்சையை கிளப்பியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் பஜேரா எனும் பகுதிக்குட்பட்ட பரத்பூர் கிராமத்தில் அப்னாகர் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்கள் மஹிளா சதன், சிசு பால் கிரஹா ஆகியனவற்றின் திறப்புவிழா நேற்று இடம் பெற்றது.இதில் பேசிய போதே மோகன் பகவத் இவ்வாறு கூறியுள்ளார்.

மோகன் பகவத் பேசியதாவது, அன்னை தெரசாவின் சேவைகள் [illegible] தப்பட்டிருக்கும், அவரது சேவைக்குப பன்னணி குறிக்கோள மட்டும் மத மாற்றமாக இல்லாமல் இருந்திருந்தால்.மத மாற்றத்தைப் பற்றி நான் விமர்சிக்கவில்லை.

ஆனால், சேவையின் பெயரில் மத மாற்றத்தை மேற்கொள்ளும் போது, அந்த சேவைக்கான அடிப்படை ஆதாரமே மதிப்பற்றதாகி விடுகிறது.

அன்னை தெரேசாவின் குறிக்கோள் மத மாற்றமே, ஆனால், இங்கு தனது சேவையைத் தொடங்கியுள்ள அப்னாகர் அமைப்பின் கொள்கை ஏழைகளுக்கு சேவை செய்வது மட்டுமே இவ்வாறு பகவத் பேசியுள்ளார்.

மோகன் பகவத் பேச்சுக்கு அரசியல் தலைவர்கள் பலரும் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர்

**அர்விந்த் கெஜ்ரிவால்**

டில்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால் தனது டுவிட்டரில் கூறியிருப்பதாவது, கொல்கத்தாவில் உள்ள நிர்மல் ஹிரதய் ஆசிரமத்தில் ஒரு சில மாதங்கள் நான் அன்னை தெரேசாவுடன் இணைந்து பணியாற்றியிருக்கிறேன். அவர் உன்னதமானவர். அவரை தயை கூர்ந்து விட்டுவிடுங்கள்.



**டெரக் ஓ பிரெயின்**

திரிணாமூல் காங்கிரஸ் கட்சி எம்.பி. டெரக் ஓ பிரெயினும் டுவிட்டரில் தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளார்.

அன்னை தெரசா குறித்த கருத்துகளை மோடி இப்போது ஆர்.எஸ்.எஸ்.காரர்களிடம் சொல்வாரா என வினவியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஜனாதிபதிக்கு முன்னுள்ள சவால்கள்

ராஜபக்சக்களால் அனுமதிக்கப்பட்ட சீனாவை இலங்கை தனது நாட்டிலிருந்து வெளியேற்றினால் இந்தியா மகிழ்ச்சியடைந்திருக்கும். ஆனால் இந்தியாவைப் பொறுத்தளவில் இந்த விடயத்தில் இலங்கையிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை.

***இவ்வாறு economist இதழில், வெளியாகியுள்ள கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.***



இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் இந்தியாவுக்கு நான்கு நாள் பயணத்தை மேற்கொண்ட நிலையில், அவர் தனது முதலாவது அதிகாரபூர்வ வெளிநாட்டுப் பயணத்தை பயணிகள் விமானம் ஒன்றில் மேற்கொண்டதானது இலங்கையர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இவருக்கு முன்னர் இலங்கையில் நீண்டகாலமாக எதேச்சதிகார ஆட்சியைத் தனது குடும்பத்தாருடன் இணைந்து நடத்திய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வெளிநாடுகளுக்கான தனது சுற்றுப்பயணத்தை விமானப் படைக்குச் சொந்தமான தனித்துவமான விமானத்திலேயே மேற்கொள்வது வழக்கமாகும்.

இவ்வாறானதொரு நிலையில், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயணிகள் விமானத்தில் இந்தியாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டதானது இலங்கையர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இலங்கை ஜனாதிபதியின் இந்தியாவுக்கான பயணமானது பிறிதொரு வகையிலும் நோக்கப்படுகிறது.

அதாவது, இலங்கைக்கு அதிக கடனை வழங்கியுள்ளதும் ராஜபக்சக்களின் ஆட்சிக்காலத்தில் மிக முக்கிய நட்பு நாடாகவும் விளங்கிய சீனாவைக் குழப்பத்திற்கு உள்ளாக்காது உடைந்து போயிருந்த நட்புறவை இந்தியாவுடன் மீளவும் கட்டியெழுப்புவதே இப்பயணத்தின் மிக முக்கிய நோக்காகும். வடக்கில் வாழும் தமிழ் மக்களை இலங்கை ஜனாதிபதி நடத்திய விதமானது பெரும்பாலான இந்தியர்களைக் குறிப்பாக இந்தியத் தமிழர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியது.

கொடிய யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், வடக்கிற்கு அதிக அதிகாரத்தை வழங்கி அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வதாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதனையும் மகிந்த ராஜபக்ச தனது ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றாது நிலைமையை மேலும் மோசமடையச் செய்தார். கடந்த ஆண்டு இலங்கை தலைநகர் கொழும்பில் சீன நீர்மூழ்கிக் கப்பல் இரண்டு தடவைகள் தங்குவதற்கு அனுமதியை வழங்கியதன் மூலம மகிந்த ராஜபக்ச இந்தியாவை எரிச்சலுக்குள்ளாக்கினார்.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்கான தனது பயணத்தை முடித்த பின்னர், தற்போது இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இப்பயணத்தின் போது, இலங்கையின் முதலாவது சிவில் அணுசக்தி ஒத்துழைப்பு உட்பட சில உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. அதிக உடன்பாடுகள் எட்டப்படாத போதிலும், இலங்கையுடனான புதிய உடன்படிக்கைகள் சீனாவின் இலக்குகளை முறியடிப்பதற்கான இந்தியாவின் முயற்சிகளாகும் என இந்திய ஊடகம் ஒன்று விபரித்துள்ளது.

இதன் அடுத்த கட்டமாக, கடந்த 28 ஆண்டுகளின் பின்னர் முதன்முதலாக இந்தியப் பிரதமர் ஒருவர் சிறிலங்காவுக்கான தனது அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். அதாவது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மார்ச் மாதத்தில் இப்பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். ராஜபக்சக்களால் அனுமதிக்கப்பட்ட சீனாவை இலங்கை தனது நாட்டிலிருந்து வெளியேற்றினால் இந்தியா மகிழ்ச்சியடைந்திருக்கும். ஆனால் இந்தியாவைப் பொறுத்தளவில் இந்த விடயத்தில் இலங்கையிட மிருந்து சாதகமான பதில் கிடைக்கப்பெறவில்லை.

மைத்திரிபால சிறிசேனவைப் பொறுத்தளவில் முதலீடு என்பது தேவைப்பாடான விடயமாகும்.

கொழும்புத் துறைமுகத்தில் சீனாவால் 1.4 பில்லியன் டொலர் பெறுமதியில் மேற்கொள்ளப்படும் திட்டத்தை மைத்திரிபால சிறிசேன நிறுத்தமாட்டார். ஆனால், இது தொடர்பாகவும் சீனாவின் பிற திட்டங்கள் தொடர்பாகவும் மீளவும் ஆராயப்படும்.

'மூலோபாய ஒத்துழைப்பைப்' பலப்படுத்துவது தொடர்பான தனது திட்டத்தை முன்னுரிமைப்படுத்துவதற்காக சீனா தனது அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்பியதன் மூலம் இலங்கை தற்போது இந்தியாவுடன் கொண்டுள்ள நல்லுறவு தொடர்பான தனது பதிலை சீனா வழங்கியுள்ளது. மார்ச் மாதத்தில் மைத்திரிபால சிறிசேன சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறிப்பாக வடக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பாக அதிகம் கவலை கொள்ளும் மேற்குலக நாடுகளைச் சமாதானப்படுத்தவும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்புகிறார். இவருக்கு முன்னர் நாட்டை ஆட்சி செய்த ஜனாதிபதி இவ்வாறான மீறல்களை விசாரணை செய்வதற்கான நம்பகமான விசாரணையை முன்னெடுப்பதற்கு மறுத்துவிட்டார். இலங்கை பொருத்தமான விசாரணையை மேற்கொள்வதற்கு அனுமதிக்காததால் அடுத்தமாதம் வெளியிடப்பட வேண்டிய ஐ.நா விசாரணையின் பெறுபேறு செப்ரெம்பர் வரை தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், யூன் மாதத்தில் இடம்பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ள இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலின் முன்னர் மைத்திரிபால சிறிசேன உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

அரசியல் யாப்பு சீர்திருத்தம், சுதந்திரமாகத் தகவல்களை வெளியிடுதல் தொடர்பான சட்டம், உணவு விலைகளைக் குறைத்தல், ஒவ்வொரு பட்டிணத்திலும் Wi-fi சேவையை இலவசமாக வழங்குதல் உட்பட பல்வேறு சீர்திருத்தங்கள் தனது முதல் 100 நாள் ஆட்சியில் மேற்கொள்வேன் என அவர் தனது தேர்தல் வாக்குறுதியில் உறுதிப்படுத்தியிருந்தார்.

ஆனால் இது தொடர்பான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படவில்லை. புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டணி அரசாங்கம் பல்வேறு கட்சிகளைக் கொண்டது. இது ஒரு அச்சாறு என உள்நாட்டு மக்கள் கருதுகின்றனர். இதேவேளையில், மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிபர் முறைமையை ஒழிப்பதாகவும் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

தகவல் சுதந்திரம் தொடர்பான சட்டத்தை அமுலாக்குவதாக வாக்குறுதி வழங்கிய போதிலும் இது தொடர்பான எவ்வித முன்னேற்றமும் இடம்பெறவில்லை. தமிழர் ஒருவர் பிரதம நீதியரசராகப் புதிதாக நியமிக்கப்பட்டதானது நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோன்று வடக்கு மாகாணத்திற்கென நியமிக்கப்பட்ட இராணுவ ஆளுநர் நீக்கப்பட்டு சிவில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டமையும் சிறிசேனவின் ஆட்சியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கில் இராணுவப் பிரசன்னம் காணப்படுகின்ற போதிலும், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களின் ஒரு பகுதி மக்களிடம் விரைவில் கையளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.


இருப்பினும், தேர்தல் தொடர்பாக அரசியல்வாதிகள் தடுமாற்றத்திற்குள்ளாக்கப்படுவர். பெப்ரவரி 18 இல் மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பேரணியின் போது ராஜபக்ச பிரதமராக வேண்டும் எனக் கோரப்பட்டது. ஆனால் இது சாத்தியமில்லை என்பதை நடந்து முடிந்த அதிபர் தேர்தலின் பெறுபேறுகள் காண்பிக்கின்றன.

**-நித்யபாரதி-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தலாக மாறினால் அரசாங்கத்தை மாற்றுவாம்

## சோபித தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)

**புலிக் கதைகளையும் சர்வதேச பழிவாங்கல் கதைகளையும் கூறி தற்போது நாட்டில் ஏற்ப ட்டுள்ள அமைதியான சூழ்நிலையினை குழப்ப வேண்டாம். தேசிய அரசாங்கத்தினை அமை க்க கடுமையாக பாடுபட்டோம். அதேபோல் இவ் அரசாங்கம் நாட்டிற்கு அச்சுறுத்தலானதாக தெரியுமாயின் அதனையும் மாற்றியமைப் போம் என சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் இணைப்பாளரும் கோட்டே நாகவிகாரையின் விகாராதிபதியுமான மாதுலுவாவே சோபித தேரர் தெரிவிததுள்ளார்.**

தேசிய அரசாங்கத்தின் செயற்பா டுகள் பிரிவினைவாதமாக உள்ள தென எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ள நிலையில் தேசிய அரசாங் கத்தின் செயற்பாடுகள் முரணா னதா என வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


சர்வாதிகார ஆட்சியில் சிக்கிக் கிடந்த நாட்டினை மீட்டெடுக்க நாம் மிகப்பெரிய சவால்களை எதிர்கொண் டோம். எமது உயிர்களை பணயம் வைத்தே ஆட்சி மாறறத்திற்காக போராடினோம். சிங்கள தமிழ் முஸ்லிம் இனவாதிகளின் செயற்பாடு கள் பரவிக் கிடந்த போதும் அவை அனைத்திற்கும் அப்பால் மக்களை ஒன்றிணைத்து மூவின மக்களின தும் நாட்டினை உருவாக்கிக் கொடு த்துள்ளோம். எமது பொது எதிர ணியினை உருவாக்க முன்னர் பலர் உப கதைகளை பரப்பியதும் எதிரணி வேட்பாளர் யாருமில்லை என கேலி செய்து கொண்டிருந்த போதும் சகலரையும் ஒன்றிணை த்து பெரிது எதிரணியினை உருவா க்கிக் கொடுத்த எமக்கு அதன் மீதான நம்பிக்கையும் அதிகமா கவே உள்ளது.

நாட்டில் இப்போது மக்கள் அனுப விக்கும் நல்லதொரு சமாதான மான ஆட்சி அமைந்துள்ளது. நல்லாட்சிக்கான வழி திறந்துள்ளது. இப்போது மக்களின் ஒற்றுமை யினை சிதறடித்து நாட்டில் குழப்பத் தினை ஏற்படுத்தும் வகையில் விளக்கங்களை முன்வைக்கின் றனர். பிரிவினைவாதமெனவும் சர்வதேசத்தின் பழிவாங்கலுக்கு நாட்டை உட்படுத்துவதாகவும் கருத்துக்களை தெரிவிப்பதால் நாடு பிளவுபடப் போவதில்லை.

அதேபோல் அமைந்திருக்கும் தேசிய அரசாங்கத்தின் மூலம் நாட்டை பிளவுபடுத்த எவரேனும் நினைத்திருந்தால் அதற்கும் நாம் இடம்கொடுக்கப் போவதில்லை. நாம் எப்போதும் மக்களின் நலன் கருதியே சிந்திக்கின்றோம். எனவே, மக்களை கஷ்டப்படுத்தும் ஆட்சிக்கு ஒருபோதும் உதவி செய்ய மாட்டோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# கச்சதீவை மீட்கும் வழக்கினில் சாதகமான தீர்ப்பை பெறுவோம்

## முதல்வர் பன்னீர்செல்வம் தெரிவிப்பு



கச்சதீவை மீட்க உச்ச நீதிமன் றத்தில் தொடரப்பட்ட வழக்கில் சாதகமான தீர்ப்பைப் பெறுவோம் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல் வம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சட்டப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாத த்துக்கு பதிலளித்து நேற்று முந்தி னம் திங்கட்கிழமை அவர் மேலும் உரையாற்றுகையில்,

தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப் படும் போதெல்லாம், அவர்களை விடுவிக்க தொடர் முயற்சிகளை, தமி ழக அரசு மேற்கொண்டு வருகிறது.

கடந்த சில மாதங்களாக, கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்ட போதும், அவர்க ளின் படகுகள் இலங்கை அரசால், விடுவிக்கப்படாமல் முடக்கி வைக் கப்பட்டிருந்தன.

கடந்த 4ஆம் திகதியன்று, இலங்கையிலுள்ள இந்திய தூதரக அதிகாரியிடம், தூதரக ரீதியில் படகுகள் விடுவிக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திட, இலங்கை அதிகாரிகளை வற்புறுத்தும்படி தமிழக அரசு சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

தமிழக மீனவர்களின் படகு களை விடுவிப்பதற்கு ஏதுவாக, இலங்கை நீதிமன்றத்தில் வாதாட உரிய வழக்குரைஞர்களை நியமிக் கவும், அதற்கான செலவை தமிழக அரசே ஏற்றுக் கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில், இந்திய தூத ரகத்தால், வழக்குரைஞர்கள் நிய மிக்கப்பட்டு, கடந்த 12ஆம் திகதிய ன்று, படகுகளை இலங்கை நீதி மன் றம் விடுவித்து உத்தரவிட்டுள்ளது.

இலங்கை நீதிமன்றங்களால், விடுவிக்கப்பட்ட மீன்பிடிப் படகு களை பொறுப்பேற்றுக் கொண்ட, மீன்வளத்துறை அதிகாரிகள் இலங் கைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

மீன்பிடிப் படகுகளை, தமிழகம் கொண்டு வருவதற்கான எரியெண் ணெய், உணவு மற்றும் பழுது நீக்கச் செலவு ஆகிய அனைத்து செலவீனங்களையும், தமிழக அரசே ஏற்கும்.

பாக் ஜலசந்தியிலும், மன்னார் வளைகுடாவிலும் தமிழக மீனவ ர்கள் மீன்பிடிப் பிரச்சினை இரு நாட்டு மீனவர்கள் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படலாம் என்பதால், இரு நாட்டு மீனவர்களிடையே வரும் மார்ச் 5ஆம் திகதியன்று சென்னையில் பேச்சுவார்த்தை நடத்த, மத்திய அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மீனவர் பிரச்சினைக்கு நிரந்த ரத் தீர்வாக அமைவது, கச்சதீவு மீட்பு மட்டுமே என்பதால், மத்திய அரசிடம் இதனைத் தொடர்ந்து வற்புறுத்துவோம்.

கச்சதீவை மீட்பது தொடர்பாக, உச்ச நீதிமன்றத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து ள்ள வழக்கில், சாதகமான தீர்ப்பை பெறுவோம் என்ற நம்பிக்கை உள் ளது என்று முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## மின்சார ஏரி

கரன்ட் கட்டாகி விட்டால் என்ன பாடுபடுகின் றோம். அதுவும் காலை நேரத்தில் கரன்ட் போய்விட்டால் நம் கதி அதோகதி தான்.

இந்தப் பிரச்சினை எதுவும் இல்லாமல் எங்க ளுடைய விருப்பப்படி மின்சாரம் கிடைத்தால் எப்படி இருக்கும்? அல்பைன் என்கிற ஒரு பகுதியில் ஓர் ஏரி இருக்கின்றது. அதிலிருந்து மின்சாரம் கிடைக்கிறது. இது எப்படி சாத்தியப் படும் என்று தோன்றுவதில்லை.

தொழில்நுட்பக் கல்லூரியில் ஒருவன் படிக் கின்றான். அவன் பெயர் லாபாஸ். அவன் எப்பவும் எதையாவது ஆராய்ச்சி செய்து கொண்டே யிருப்பான். அப்படிப்பட்ட சிறுவர்களைப் பார்த் தால் சில பெரியவர்களுக்கு எரிச்சல் வரும்.

அதைத் தொடாதே, இதைச் செய்யாதேயென்று தடை போட்டுக்கொண்டே இருப்பார்கள். ஆனால் நாங்கள் அப்படியிருக்கக்கூடாது. சில நேரத்தில் நாங்கள் அப்படிச் செய்வது ரொம்ப வேடிக்கையாகவும் போய்விடும். எடுத்த எடுப்பி லேயே அவர்களுடைய முயற்சிக்கு தடைபோடா மல் அவர்களை உன்னிப்பாக கவனிக்க வேண்டும், உற்சாகப்படுத்த வேண்டும்.

லாபாஸ் என்கிற அந்த சிறுவனுடைய அப்பா அப்படித்தான் அவனை உற்சாகப்படுத்தினார். அந்தப் பகுதியில் இருக்கிற ஏரியில் ஆராய்ச்சி செய்தான் அவன். அந்த நீரில் அமிலத் தன்மை அதிகம் இருக்கிறதென்பதை கண்டு பிடித்தான்.

இந்த நீரில் இரு மின்வாய்கள் அதாவது தாமிரம், துத்தநாகம் இந்த இரு உலோகங் களால் செய்யப்பட் கோல்களை தண்ணீரில் மூழ்கும்படி செய்து மின் கம்பிகளால் அதை இணைத்தால் அந்த ஓர் ஏரியே பற்றறி மாதிரி ஆகிவிடும்.

இதை அவன் தன்னுடைய அப்பாவிடம் சொன் னான். அவரும் அவனுக்கு உறுதுணையாக இருந்தார். அந்த சிறுவன் தான் சொன்னபடி செய்து சில மின் குமிழ்களுக்கு இணைப்புக் கொடுத்தான். உடனே பிரகாசமான வெளிச்சம் கிடைத்தது.

பின்பு ஏரியிலிருந்து கிடைக்கின்ற இந்த மின் சார த்தை வைத்தே அந்தப் பகுதியிலுள்ள எல்லா விள க்குகளையும் எரியும்படி செய்தி ருக்கிறார்கள். இது எப்படிச் சாத்தியப்படும் என்று சந்தேகப்படுகிறீர்கள் என்று நினைக் கிறேன்.

ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் நீர்த்த கந்தக அமி லத்தை எடுத்துக்கொள்ளுங்கள். தாமிரத் தகடு ஒன் றையும் துத்தநாகத் தகடு ஒன்றையும் ஒன்றையொ ன்று தொடாமல் இருக்கும்படி வையுங்கள். இந்த இரு தகடுகளையும் கம்பிக ளால் இணைத்தால் மின்சாரம் வருகின்றது. இந்த அமைப்பை ஓட்லர் மின்கலம் என்று சொல்கிறார்கள்.

அந்தச் சிறுவன் ஆராய்ச்சி செய்த அந்த ஏரியே இங்கே அமிலம் கொண்ட ஒரு பாத்திரம் மாதிரி இரு க்கின்றது. அது இரண்டு மின் வாய்களா அதான் தாமிரம். செம்பு இதை பெரிய அளவில் கோல் போல் செய்து ஏரியில் மூழ்க வைத்தார்கள். இதை மின் கம்பிகளால் இணைத்தார்கள். மின்சாரம் கிடைத்து விட்டது.

இப்படி அறிவு நுட்பத்தோடு இருக்கிறவர்களும் இரு க்கிறார்கள். வேறு மாதிரியும் இருக்கிறார்கள். கரன்ட் கட்டாகிவிட்டது. புழுக்கம் தாங்க முடியவில்லை. ஒரு த்தர் மின்சார நிறு வனத்திற்கு போன் செய்தார். மின்குமிழ்களுக்கு கரன்ட் இல்லாவிட்டாலும் பர வாயில்லை போனுக்காவது கொஞ்சம் அனுப்புங்கள் என்றார்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய- இலங்கை உறவுகள்

# புதியதோர் ஆரம்பம்

...பாக்கு நீரிணையின் இலங்கைக் கடற்பரப்பினை ஊடுருவ மேற்கொள்ளப்படும் இந்திய மீனவர்களது அத்துமீறல்கள் கேள்விக்கிடமின்றி தொடர்வதுடன் தவறிழைத்த மீனவர்களை அமைச்சரின் விஜயத்திற்கு முன்னரும் அவர்களது படகுகளை ஜனாதிபதியவர்களின் வருகைக்கு முன்னரும்

**சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் இந்திய- இலங்கை உறவுகள்; புதியதோர் ஆரம்பம் என்னும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கம்**

**தமிழில்- யோகர்**

விடுவிக்கும் இலங்கை அரசின் பிழையான சமிக்ஞைகள் காரணமாக அதேபோன்ற அத்துமீறல்கள் பிந்திய விதமான மூர்க்கத்தனத்துடன் மேலும் கூடுதலாக இடம்பெறுவதாகவே இருக்கிறது.

தமிழ்நாடு அரசின் கொதிநிலை அரசியலுக்கும் மேலாக இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் 'தென் பிராந்திய' அலுவல்களுக்கு பொறுப்பான நிர்வாகத்தை மேற்கொள்ளும் தென்னிந்தியர்களுங்கூட தொடரும் இந்த அத்து



மீறல்களுக்கு காரணமாக இருப்பதாக விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கை மட்டில் ஒரு பக்கப் பார்வையுடன் கூடிய தப்பபிப்பிராய மனோநிலையில் இருக்கும் இவர்கள் மேற்படி மீறுதல் மனப்போக்கை மாற்றுவதற்கு அரசியல் ரீதியிலான கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வாதிடுகிறார்கள் என்பதே விமர்சகர்களது கருத்தாக இருக்கிறது.

புதுடில்லியிலிருக்கும் இலங்கைக்கான வெளியுறவுப் பணியகச் செயற்பாடுகளும் (MEA) இணைச் செயலர் பதவிமட்டத்து அரசியல் தலைமைத்துவம் என்றளவிற்கு உயர்த்தப்பட வேண்டும்.

புதுடில்லியில் புதிய அரசாங்கமொன்று பதவிக்கு வந்தபின்னருங்கூட இலங்கை கடல் பிராந்திய அத்துமீறல்கள் தொடர்ந்தும் முனைப்புடன் இடம்பெற்று வருவதானது இலங்கையின் வெளிநாட்டுப் பணியக அதிகார மட்டச் செயற்பாடுகள் அயல்நாடுகளில் ஸ்திரத்தன்மையின்மையை ஏற்படுத்துவதற்கு இந்தியா எடுத்திருந்த முயற்சிகளுக்கான முன்னைய பதிவுகள் இது போன்ற சந்தேகங்களைத் தொடர்ந்தும் ஏற்படுத்துவதாகவேயிருக்கும்.

இந்தியாவுக்கு இலங்கை வடமாகாண சபைக்குமிடையிலிருக்கும் இந்த தொப்புள்கொடி உறவானது தென்னிலங்கையில் அவசியமில்லாத பதற்றத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கிறது. யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதுவர் ஒரு சந்தர்ப்பத்தில் உள்ளூரில் நிகழ்ந்த வழக்கொன்றினை மட்டில் தலையீடு செய்யும் விதத்தில் நீதியரசரை தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு பேசியுள்ளார். இது நல்ல விதமான ஓர் அயலுறவுச் செயற்பாடு அல்ல. இலங்கையின் வடபகுதியை தனது சொந்த ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு பகுதி என்ற விதமாக எண்ணி இந்தியா செயற்படக் கூடாது. ஆக்கபூர்வமற்ற விதமாக, பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையை நீண்டகால ஓட்டத்தில் பாழாக்கிவிடக்கூடிய வி[illegible]

மாற்றமின்றி தொடர்ந்தும் எவ்வளவு பிற்போக்கானவையாக இருக்கின்ற தென்பதையே காட்டுவதாயுள்ளன.

இலங்கையின் போருக்குப்பின்னரான வடமாகாண மீள் அபிவிருத்திக்கென போதியளவு பங்களிப்பினை இந்திய அரசு வழங்கியிருந்தாலுங்கூட அது முற்றுமுழுவதும் பிறர் நலம் நோக்கியதாக இருந்ததில்லை. இவ்விதமான ஒரு செயல் நோக்கு இலங்கையில் மற்றுமொரு கிளர்ச்சியை உருவாக்குவதற்கான போர் ஆயத்த வேலைகளுக்கு சந்தர்ப்பமும் உத்வேகமும் கொடுப்பதற்கான முயற்சியாகவும் பார்க்கப்படக்கூடும்.

வடமாகாண சபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்று போரின்போது தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட 'இன அழிப்பு' ('Genocide') மட்டில் சர்வதேச விசாரணையொன்றைக் கோரியிருப்பது சந்தர்ப்பத்திற்கேற்ப திட்டமிடப்பட்ட ஓர் அபூர்வ நிகழ்வாகவே தோன்றுகிறது. இந்த விதமான உரிமைக் கோரிக்கைகள் மட்டில் மறைமுகமான தகவல்களை இந்திய ஊடகங்களுக்கு கசியவிடுவதன்மூலம் இந்தியா இவ்விடயத்திலிருந்து தன்னை அந்நியப்படுத்திக் கொண்டது. இருப்பினும், தனது



காயங்களைக் கீறி மேலும் இரணமாக்கிக் கொள்ளக்கூடாது. இதனாலேயே தேசிய அலுவல்கள் சம்பந்தமான விடயங்களில் வடபகுதி விலகிச் சென்று விடாமலோ அல்லது தேசிய நீரோட்டத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு விடாதபடியோ பார்த்துக்கொள்வதற்காக கொழும்பு அரசு யாழ்ப்பாணத்துடன் கூடுதல் நெருக்கம் ஏற்படும் விதத்தில் தனது பிடியை இறுக்க முயற்சிக்கிறது என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை.

தமிழ் நாட்டை மையப்படுத்தும் விதத்தினை தனது இலங்கைக்கான இந்த வெளிநாட்டுக் கொள்கையை பொருத்தமற்றதென இந்தியா கைவிடுவதுடன் புதுடில்லியுடன் சிறந்த அணுகு முறையிலான கலந்துரையாடல்களின் அடிப்படையில் தென்னிந்திய மாநிலங்களுடன் நெருக்கமான உறவினை இலங்கையும் ஏற்படுத்திக்கொண்டிருக்குமானால் அண்மைக்கால வருடங்களின் போது இந்திய- இலங்கை உறவுகள் இந்தளவு சீரழிவுக்கு உள்ளானது போல் ஆகியிருக்காது.

முன்னாள்வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் 'இந்திய- இலங்கை உறவுகள்' பற்றி கூறுகையில் "மாற்ற முடியாதளவு தனிச்சிறப்பு வாய்ந்தவை" என குறிப்பிட்டிருந்தது டன் தற்போதைய இந்திய பிரதமர் நரேந்திர மோடியுங்கூட ஒரு சில நாட்களுக்கு முன்னர் ருவீற்[illegible] செய்தியொன்றில் "கலாசாரம் மற்றும் வரலாற்று ரீதியிலான பிணைப்புகளுடன் நாம் பகிர்ந்து கொண்ட நமது சிறந்த ஒழுக்க விழுமியங்களாலும் வலுப்பெற்ற எமது உறவுகள் எவராலும் உடைக்கப்பட முடியாதவையே" என குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

இந்தியாவின் கிழக்காசியாவுக்கான வெளிநாட்டு அலுவல்கள் (MEA) பணியகம் வரையவிருக்கும் இருதரப்பு கொள்கை பற்றிய இணைந்த விதமான வாய்மொழி வெளிப்பாடுகள் எதுவுமற்ற நல்லெண்ண விஜயமொன்றாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களது



தற்போதைய விஜயம் அத்தியாவசியமான முறையில் அமையும் எனலாம். இதயபூர்வமான அனுதாப மற்றும் பரிவு உணர்வுகளுக்கும் அப்பாற்பட்ட மேலோட்டமான பார்வையே அவர்களது தற்போதைய பார்வையாக இருக்கும். இந்தவிதமான ஒரு விஜயத்தின்போது ஏற்றுக் கொள்ளத்தக்கவிதமான இருதரப்பு விடயங்களின் முக்கியமான பகுதிகளுக்குள்ளும் இலங்கை அரசு உன்னிப்பான கவனம் செலுத்துவதென்பது அவசரத்தனமானதேயாகும்.

மேற்படியான விடயங்களுடன் மேலும் கூடுதலான விடயங்களும் தொடர்ந்து இடம்பெறப் போகும் பிரதம மந்திரியவர்களது மற்றுமோர் விஜயத்தின் போது அல்லது இந்தியப் பிரதமர் கொழும்புக்கு மேற்கொள்ளக்கூடிய பதிற் கௌரவ விஜயம் ஒன்றின்போது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படலாம்.

இலங்கைக்கான விஜயத்தின்போது ஜனாதிபதியவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் 13 ஆவது திருத்தம், உள்ளக இடம்பெயர்ந்தோர், சம்பூர் நிலக்கரி மின்சாரத் திட்டம் மற்றும் அகதிகளை திரும்ப அழைத்துக் கொள்வது போன்ற விடயங்கள் சந்திப்பிற்கான திட்ட ஏற்பாட்டில் உள்ளடங்குவதாக இந்தியா ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளது. பேச்சுவார்த்தைக்கான தனது திட்ட ஏற்பாட்டில் இலங்கை தனது பங்கிற்கு என்ன செய்ய உத்தேசித்துள்ளது? (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதி நீதிமன்றுக்கு இழுத்துச் செல்லப்பட்டார்!

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத். பொலிஸ் அதிகாரிகளால் நீதிமன்றுக்கு நேற்று முன்தினம் தரதரவென இழுத்து செல்லப்பட்டார்

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் (வயது 47). இவர் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ஆவார். இவர் கடந்த 2012 பெப்ரவரி மாதம் ஜனாதிபதி பதவியில் இருந்தபோது. அந்த நாட்டின் குற்றவியல் நீதிபதி அப்துல்லா முகமதுவை கைது செய்ய உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து முகமது நஷீத்துக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்றன. இதன் விளைவாக அவர் பதவி விலக நேர்ந்தது. 2013 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். இந்த நிலையில் முகமது நஷீத்தை பொலிஸார் கைது செய்தனர்.

அவர் மீது தீவிரவாத குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டுள்ளன. ஆனால் அதன் விபரம் வெளியிடப்படவில்லை. முகமது நஷீத்தை பொலிஸார் நீதிமன்றிற்கு அழைத்து செல்ல முயற்சி செய்தனர். முகமது நஷீத் செய்தியாளர் களிடம் பேச முயற்சி செய் தார். ஆனால் பொலிஸார் அவரை தடுத்துவிட்டனர். ஒத்துழைப்பு கொடுக்காததை அடுத்து





பொலிஸார் அவரை தரதரவென இழுத்து சென்ற னர். இதற்கிடையே அவருக்கு நீதிமன்றில் பிணை வழக்க மறுக்கப்பட்டுள்ளது. அவர் தனது சார்பில் சட்டத்தரணியை நியமனம் செய்ய மூன்று நாட் கள் கொடுக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் கைது உட்பட. மாலைதீவில் தற்போது உள்ள நிலவரங்கள் மிகவும் கவலையளிக்கிறது என்று இந்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. மாலைதீவில் தற்போது அமைதி திரும்ப வேண்டும். மாலைதீவுகள் அரசியலமைப்பு மற்றும் சட்ட வரம்புக்குள் அவர்களின் வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்தியா கேட்டுக்கொண்டு ள்ளது.(இ-5)

# ஐ.எஸ்.ஐ.எஸ்.இயக்கத்தின் இளம் தீவிரவாதிகள் படை!

## அதிர்ச்சி காணொலி வெளியீடு





இளம் வயது சிறுவர்களுக்கு தீவிரவாத பயிற்சி அளித்து வரும் காணொலி காட்சிகளை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் வெளியிட்டுள்ளது.

9 நிமிடம் ஓடக்கூடிய அந்த காணொலியில் இராணுவப் பயிற்சியில் நிற்பது போல் சுமார் 100 சிறுவர்கள் வரிசைகளாக அணி வகுத்து நின்று போர்ப் பயிற்சி மற்றும் தீவிரவாத பயிற்சி பெறும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தின் கறுப்பு நிற கொடி பறக்க. சீருடைகளுடன் தலையில் கறுப்பு நிற ரிபன்களை கட்டியபடி. பயிற்சியாளர்களின் கட்டளை குரலின்படி அந்த சிறுவர்கள் செயற்படுகின்றனர்.

'இளம் புலிகள்' என இந்த படையை ஐ.எஸ்.ஐ.எஸ். காணொலி குறிப்பிடுகின்றது.

இந்தப் படையில் 5 வயதுக்கு குறைவான சிறுவர்களும் இணைந்திருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

# ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் 1465 பேர் குண்டுவீச்சில் பலி!

## அமெரிக்கா அதிரடித் தாக்குதல்

**பல கொடூரங்களை அரங்கேற்றிவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அரக்கர்களுக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் ஆயிரத்து 465 ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் அமெரிக்காவின் குண்டுவீச்சில் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்க அமெரி க்காவும் அதன் நட்பு நாடுகளும் குண்டு வீசு நடத்தி வருகின்றனர். சிரியாவில் கடந்த செப்டெம்பர் 23 ஆம் திகதி முதல் அமெரிக்காவும். அரபு நாடுகளும் இணைந்து குண்டு வீசி வருகின்றன.

இதுவரை நடந்த தாக்குதல்களில் மொத்தம் ஆயிரத்து 600 தீவிரவாதிகள் பலியாகியுள்ளனர். அவர்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், அல்கொய்தா மற்றும் அல் நுஸ்ரா முன்னணியை சேர்ந்தவர்கள் அடங்குவர்.

இந்த நிலையில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் மட்டும் ஆயிரத்து 465 பேர் குண்டு வீச்சில் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலை சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவும், இங்கிலாந்து கண்காணிப்பு குழுவும் தெரிவித்துள்ளது.

பலியான ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டை சேர்ந்தவர்கள். அவர்கள் தவிர அல்- நுஸ்ரா முன்னணியை சேர்ந்த 73 தீவிரவாதிகளும் கொல் லப்பட்டுள்ளனர் என பட்டியலிடப்பட்டுள்ளது. (இ-5)




# வான் கவிழ்ந்து தீப்பிடித்ததில் 10 பேர் சம்பவ இடத்தில் பலி!

பாகிஸ்தானில் கராச்சி அருகே நேற்று முன்தினம் வான் ஒன்று சென்று கொண்டிருந்தது. இதில் ஏராளமானோர் பயணம் செய்தனர். நூரிஅலாத் நகருக்கு அருகே சென்றபோது அந்த வான் கவிழ்ந்தது.

கவிழ்ந்த வேகத்தில் அதன் பெற்றோல் டாங் உடைந்து தீப்பிடித்தது. தகவல் அறிந்ததும் தீயணைப்பு குழுவினர் அங்கு விரைந்து சென்றனர்.

அதற்குள் தீயில் கருகி 10 பேர் உயிரிழந்தனர். 9 பேர் காயம் அடைந்தனர். அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இறந்தவர்களில் 7 பேரின் உடல்கள் முற்றிலும் எரிந்து அடையாளம் காண முடியாத அளவுக்கு கரிக்கட்டையானது.

விபத்துக்குள்ளான வானில் அளவுக்கு அதிகமாக ஆட்கள் ஏற்றி இருந்தனர். வீதி மோசமாக இருந்ததால் டயர் வெடித்து கவிழ்ந்த தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானில் வீதிகள் படுமோசமாக இருப்பதாகவும். வாகனங்கள் சரிவர பராமரிக்கப்படாததால் விபத்துக்கள் அதிக அளவில் நடப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் பேருந்து மோதிய விபத்தில் 62 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை வெளிப்படுத்துங்கள்

## ஜே.வி.பி. மாற்றுக்குழு கோரிக்கை

இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென ஜே.வி.பியின் மாற்றுக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் சில ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தங்கள் என்ன என்ன என்பது குறித்து வெளிப்படுத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி. கட்சியின் மாற்றுக் குழு அழைப்பாளர் அனுருத்த பொல்கம்பொல தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த போது நான்கு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தங்களின் உள்ளடக்கம் குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டியது அவசியமானது.

இந்த உடன்படிக்கைகளின் மூலம் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு பாரதூரமான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் எந்தவொரு நடவடிக்கைக்கும் பாராட்டு தெரிவிக்காத அமெரிக்கா இந்த உடன்படிக்கைகளை வரவேற்றுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார். (இ-5)

# நீச்சல் பயிற்சியில் ஈடுபட்ட அதிகாரி உயிரிழப்பு

(கொழும்பு)

திருகோணமலையிலுள்ள கடற்படைத்தளத்தில் நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 19 வயது கெடெட் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை உயிரிழந்துள்ளதாக, கட்டளைத் தளபதி இந்திக சில்வா தெரிவித்தார். இவர் நீச்சல் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த போது, சுவாசிப்பதற்கு சிரமப்பட்டமையால், திருகோணமலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். ஆனால், அவரை வைத்திய சாலை யில் அனுமதிக்கும் போதே, அவர் உயிரிழந்து விட்டதாகவும் கட்டளைத்தளபதி மேலும் தெரிவித்தார்.

# தேசிய அரசு வேண்டாம்!

## ஜே.வி.பி.போர்க்கொடி



(கொழும்பு)

**தேசிய அரசாங்கம் வேண்டாம் என ஜே.வி.பி கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நாடாளு மன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும எனவும் தெரிவித்துள்ளார்.**

தேர்தல் ஒன்றை நடத்தாமல், நாடாளுமன்றின் காலத்தினை நீட்டிக்க எடுக்கும் முயற்சிகளை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது.

பொதுத் தேர்தலின் பின்னர் அந்தந்த கட்சிகளுக்கு தேவையான வகையில் தேசிய அரசாங்கமொன்றை அமைத்துக்கொள்ள முடியும்.

தேசிய அரசாங்கமொன்றில் ஜே.வி.பி அங்கம் வகிக்காது என சிங்கள பத்திரிகையொன்றுக்கு அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகளை விரைவுபடுத்துமாறும் கோரிக்கை விடுத்ததாகவும் ஆனால் புதிய அரசாங்கம் ஊழலுக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்வதில் அசண்டையீனமாக செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த அரசாங்கத் தில் அங்கம் வகித்த ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளதாகவும் இருப்பினும் அதனால் பயன் ஏதும் கிடைக்கவில்லை எனவும அவர் மேலும் தெரிவித்தார். தேசிய அரசாங்கமொன்றை அமைக்க சுதந்திரக் கட்சி இணக்கம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 293

ராகுலன் பாலா




ராஜமணி சுப்ரமணி




பிச்சைக்கார நலச்சங்கம்

நபர் 1 : நேத்து ராத்திரி என் வீட்டுக்கு ஒரு திருடன் வந்து திருடுவதற்கு முயற்சி பண்ணிக்கிட்டு இருந்தான்.

நபர் 2 : ஐயையோ! அப்புறம்...?

நபர் 1 : எல்லா விளக்கையும் போட்டு நானும் அவன் கூடச் சேர்ந்து பணத்தைத் தேடினேன்.



நபர் 2 : என்னென்று

நபர்1: ஆனாலும் கடைசி வரைக்கும் என் வீட்டுக்காரி பணத்தை எங்க வைச்சான்னு எங்களால கண்டுபிடிக்கவே முடியல.

புவி புவி

ஒரு வயசு பையன் அப்பாக்கிட்ட சொன்னானாம்.
அப்பா உங்களுக்கு ஒரு நல்ல செய்தி ஒரு கெட்ட செய்தி சொல்லப் போறன்.



சரி முதல்ல கெட்ட செய்திய சொல்லு
பக்கத்து வீட்டு ஆண்டி இனி வீட்டுக்கு தண்ணி பிடிக்க வரமாட்டாங்களாம்
நல்ல செய்தி என்னடா?
அவங்க பொண்ணு தான் இனி வர போறாங்களாம்..
இனிமே நல்லா வெயிட் தூக்கிப் பழகணும்.

சந்திரன் சாலி




அசோக் குமார்

**உன்னிடம் யாரையும் அளவுக்கு அதிகமாக
பேசவோ பழகவோ விடாதே
அவர் ஒரு நாள் கூட உன்னிடம் பேசாமல்
இருந்தால் உன்னால் யாரிடமும்
அன்பாய் பேசவும் முடியாது
பாசமாய் பழகவும் முடியாது.**

**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் படுகொலைத் தீர்மானத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

**வடமாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ''இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே'' என்ற தீர்மானத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக வலி.மேற்குப் பிரதேச சபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற மாதாந்த பொதுக்கூட்டத்தில் தவிசாளர் திருமதி நாகரஞ்சினியால் மேற்படி தீர்மானம் சபையில் வழிமொழிந்து நிறைவேற்றப்பட்டுள்ளது.

வட மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் முன்மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இந்த நாட்டில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலையே என்ற தீர்மானத்திற்கு வலுச் சேர்க்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

[illegible]ற் கண் இவ்வாறான துணிச்சலான தீர்மானத்தினை எதிர்ப்பின்றி வடக்கு தமிழர்களது அரசாக நிறைவேற்றியமையை இட்டு பாராட்டுவதோடு வாழ்த்துகின்றேன். இவ்விடயம் தொடர்பில் இவ் இலங்கைத் தீவில் எமக்கும் சுதந்திரம் வழங்கியதாக கூறப்பட்ட காலம் முதலாக இந்த நாட்டில் ஆண்டாண்டு காலமாக நீண்ட நெடிய வரலாற்றை கொண்டு வாழ்ந்த தமிழர்கள் மீது அரசு இனப்படு கொலையையே மேற்கொண்டு வந்துள்ளது. இவ்வாறு திட்டமிட்ட வகையில் தழிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படு கொலையே என்ற எமது வடமாகாண சபை முதல்வரின் தீர்மானத்திற்கு வலுச்சேர்க்கும் அதேவேளை இவ் இனப்படுகொலை குறித்த இந்த முறைப்பாட்டையும் கவனத்தில் எடுத்து தகுந்த விசாரணைக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்கும் பரிந்துரைக்க ஆவன செய்யும் பொருட்டு அனைத்து தழிழ் உறவுகளும் உறுதியுடன் கரம் கோர்த்துக் கொள்ள வேண்டும். தழிழ் மக்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் கடந்த 60 வருட காலமாக வரலாற்று வன்முறைகள், கொலைகள், கூட்டுக் கொலைகள், பாலியல் பலாத்காரம் மற்றும் பாலியல் வல்லுறவுகள் பண்பாடு, கலாசார மற்றும் மொழி அழிப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டமை ஓர் இனத்தினை அழிக்கும் இல்லாதொழிக்கும் செயல் என்பது வெளிப்படையான உண்மை.

இந்த வகையில் பாதிக் கப்பட்ட இலங்கை வாழ் மக்கள் என்ற வகையில் மக்கள் கொல்ல ப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை தடுக்க முடியாத நிலையில் இருந்த நாம் அவர்களுக்கான நீதியை நிலை நாட்ட வடமாகாண சபை முதல்வரின் இந்த நீதிக்கான பயணத்தில் எமது வலுவையும் இணைத்துக் கொள்வோம.

இதேவேளை தழிழர் தம் தாயக்த்தில் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்த படுகொலைகள் தொடர்பிலும குறிப்பாக குமுதினிப்படுகொலை, கொக்கட்டிச்சோலை படுகொலை, செம்மணிப்படுகொலை.

நவாலி சென். பீட்டர்ஸ் தேவாலய படுகொலைகள், செஞ்சோலைப படுகொலைகள் என நீண்டு செல்லும் படுகொலைகள் தெடர்பான படுகொலைகள் தொடர்பிலும் உரிய முறையிலான விசாரணைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் இனங்காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்த வழி ஏற்படுத்தப்பட வேண்டும். இது மட்டும் அல்லாமல் ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றாக கருதப்படும் ஊடகத்துறை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் படுகொலைகளும் கூட உரிய முறையான விசாரணைக்கு உட்படுத்தி குற்றவாளிகள் இச்சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது மிக முக்கியமான ஒன்றாகும்.

இதேவேளை இதுவரை தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் தற்போதுள்ள கொழும்பு அரசு அதிக அக்கறை காட்டக் கூடிய வகையில தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என இவ் இடத்தில் மிக வினயமாக கூறிக் கொள்கின்றேன். இவ்வாறே காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்தி அவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை ஏக்கத்துடன் தவித்து நிற்கும் உறவுகளுக்கு கொழும்பு அரசு திட்டவட்டமாக கூறும் வகையில் நடவடிக்கையை தழிழர் அரசாகிய வடக்கு அரசு ஏற்படுத்த வேண்டும். கடந்த இரண்டு தசாப்த காலமாக இடம்பெற்று வந்த இவ் விடயம் தொடர்பில் உரிய முறையான மழுப்பலற்ற பதிலை ஆளும் வர்க்கம் கூறத்தக்கதான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். இதேவேளை எமது மண்ணில் அரங்கேற்றப்பட்ட ஆள் கடத்தல், கப்பம் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பிலும் விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

போரின் வடுக்களுடன் வாழும் மக்களுக்கான இவ் உதவிகள் முழுமையான வாழ்வாதாரத்திற்கு பொருத்தமற்ற ஒன்றாக அமைவது தொடர்பில் பலரும் அறிந்த விடயம். இவ் விடயம் தொடர்பில் போரின் வடுக்களுடன் வாழும் மக்களுக்கு அவர்கள் உண்மையில் உயர் நிலை பெறத்தக்கதான வழிகளை மேற்கொள்வது மிக முக்கியமான ஒன்றாகும். இவ்விடயம் தொடர்பிலும் கொழும்பு அரசு புதிய உத்தி முறைகளை பயன்படுத்தி உண்மைத் தரவுகளுக்கு ஏற்ப உதவ முன்வர வேண்டும். இதற்கான உரிய உயரிய பொறிமுறையினை ஏற்படுத்தும் பொறிமுறையினை வடக்கு தழிழர் அரசு உரிய தீர்மானத்தின் வாயிலாக உருவாக்க கொழும்பு அரசுக்கு அழுத்தம் வழங்க உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார். இதன்போது சபையில் பிரசன்னமாகியிருந்த தழிழ்தேசிய கூட்டமைப்பின் 10 உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தவேளை சபையில் காணப்பட்ட ஐக்கிய மக்கள் முன்னணியினை சேர்ந்த மூவரில் ஒருவர் வருகை தராத நிலையில் ஏனையவர்கள் பலத்த வாதவிவாத எதிர்ப்புக்கு மத்தியில் இத்தீர்மானம் தொடர்பில் நடு நிலையினை வகிப்பதாக கூறிக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## தமிழகத்தில் இலங்கையர் ஒருவர் மர்மமான முறையில் மரணமானார்

(கொழும்பு)

தமிழகத்தில் இலங்கையர் ஒருவர் உள்ளிட்ட இருவர் மர்மான முறையில் உயிரிழந்துள்ளனர்.

தமிழகத்தின் உய்யன் கொண்டான் குளத்திற்கு அருகாமையில் இந்த இரண்டு பேரும் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

[illegible] குளத்திற்கு அருகாமையில் [illegible]டகப்பட்ட சடலங்கள் மகாத்மாகாந்தி ஞாபகார்த்த வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அங்கு பிரேத பரிசோதனை நடத்தப்பட உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உய்யன்கொண்டானையைச் சேர்ந்த 21 வயதான செல்வம் என்பவரும், ரெட்டைவாசிக்காலையைச் சேர்ந்த 42 வயதான ஜீ.அசோக் என்பவரும் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

அசோக் என்பவர் இலங்கைத் தமிழர் எனவும், கடந்த பத்து ஆண்டுகளாக திருச்சியில் வசித்து வந்தார் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னதாக இவர்கள் உயிரிழந்திருக்கக் கூடும் எனவும் சடலங்கள் நேற்று முன்தினம கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 140 | 120 |
| தக்காளி | 100 | 140 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 50 |
| கோவா | 100 | 100 | 90 | 80 |
| கரட் | 200 | 120 | 200 | 200 |
| பூசணி | 120 | 100 | 90 | 120 |
| புடோல் | 60 | 80 | 60 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 90 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 90 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 160 | 200 |
| பீற்றூட் | 100 | 80 | — | 100 |
| கறிமிளகாய் | 200 | 180 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 400 | — | 300 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 100 | 60 | — |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 25 |
| தேசிக்காய் | 20 | 30 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 100 | 140 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 150 | — | 160 |

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி. செல்வரத்தினம் நாகலட்சுமி

மயிலிட்டி தெற்கு கட்டுவனை பிறப்பிடமாகவும் பிரான்சை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் நாகலட்சுமி அவர்கள் கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கி ழமை பொரளை ஜெயரத்ன மலர் ச்சாலையில் இடம்பெற்று பின்னர் பூதவுடல் பி.ப 4 மணியளவில் கனத்தை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.



### யோகராசா கணபதிப்பிள்ளை

(பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஊழியர்)

பளை பெரியபளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமா கவும் கொண்ட யோகராசா கணபதிப்பிள்ளை கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரியை இன்று புதன்கி ழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### ஆறுமுகம் பொன்னம்பலம்

சாவகச்சேரி,மடத்தடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பொன்னம்பலம் கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கிறிஸ்சோஸ்ரொம் யோசவ்

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், அச்சுக்கூட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்சோஸ்ரொம் யோசவ் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னா ரின் பூதவுடல் இன்று புதன்கிழமை பி.ப 2 மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கதிரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி கனகரத்தினம் மீனாட்சி

நல்லூரைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை (கும்பழாவளை மேற்கு) வசிப்பிடமாகவும் லண்டனை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கனகரத்தினம் மீனாட்சி கடந்த 19 ஆம் திகதி அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை லண்டனில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உள்ள 80பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

(மல்லாவி)

**வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கீழ் உள்ள 80 பாடசாலைகள் ஆசிரியர்கள் பற்றாக்குறையுடன் இயங்கி வருவதாகவும் 20 பாடசாலைகளில் அதிபர்கள் மட்டும் கடமையாற்றி வருகின்ற நிலையில் இப்பாடசாலைகளில் கல்வி பயின்று வரும் மாணவர்கள் கல்வியில் பெரும் பின்னடைவை சந்திப்பதாகவும் மாணவர்களின் பெற்றோர், கல்வியியலாளர்கள் ஆகியோரால் குற்றஞ்சாட்டப்படுகின்றது.**

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின்கீழ் இயங்கும் 80 பாடசாலைகளில் 8 ஆயிரத்து 60 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்நிலையில் வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தத்தை அடுத்து பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கிய இக்கல்வி வலயத்திற்குட்பட்ட 93 பாடசாலைகளில் மீள்குடியேற்றத்தை அடுத்து 85 பாடசாலைகள் மட்டுமே இயங்குகின்றன.

இதில் க.பொ.த.(உ/த) பிரிவில் கலைப்பிரிவில் தமிழ்,இந்து நாகரிகம், புவியியல் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கு தலா 3 ஆசிரியர்கள் விதம் 9 ஆசிரியர்களும் பொருளியல் பாடம் கற்பிப்பதற்கு 2 ஆசிரியர்களுமாக மொத்தம் 11 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.

இதேபோன்று வர்த்தகப் பிரிவில் கணக்கியல் கற்பிப்பதற்கு 3 ஆசிரியர்களும் வர்த்தகம் கற்பிப்பதற்கு ஒரு ஆசிரியருமாக மொத்தம் 4 ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல் பாடத்திற்கு 3 ஆசிரியர்களும் பௌதீகவியல் பாடத்திற்கு 2 ஆசிரியர்களும் உயிரியல் பாடத்திற்கு 2 ஆசிரியர்களுமாக மொத்தம் 7 ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இந்நிலையில் உயர்தரப் பிரிவில் கல்வி கற்பிப்பதற்கு மட்டும் இவ்வலயத்தில் 22 ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

இடைநிலைப் பிரிவில் விஞ்ஞானப்பாடத்திற்கு 12 ஆசிரியர்களும் கணிதப் பாடத்திற்கு 4 ஆசிரியர்களும் ஆங்கிலப் பாடத்திற்கு 4 ஆசிரியர்களும் தமிழ் பாடத்திற்கு 4 ஆசிரியர்களும் புவியியல் பாடத்திற்கு 3 ஆசிரியர்களும் விவசாயப் பாடத்திற்கு 4 ஆசிரியர்களும் உடற்கல்வி பாடத்திற்கு 2 ஆசிரியர்களும் வரலாறு பாடத்திற்கு 3 ஆசிரியர்களுமாக மொத்தம் 36 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.

இவற்றோடு ஆரம்பக் கல்வி பாடசாலைகளில் அதிபர் மட்டும் கடமையாற்றும் 20 பாடசாலைகளுக்கு 20 ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இப்பாடசாலைகளில் அவசர வேலையின் நிமிர்த்தம் அதிபர் வெளியிடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும் போது பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டுச் செல்வதற்கு பதில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால் மாணவர்களின் பெற்றோரிடம் பாடசாலை கடமைகளை ஒப்படைத்து செல்லும் அவலநிலை காணப்படுகின்றது.

இதேவேளை வவு/ஆறுமுகத்தான் புதுக்குளம் அ.த.க., வவு/கரப்புகுத்தி அ.த.க.பாடசாலைகளுக்கும் வவு/பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்திற்கும் இதுவரை அதிபர்கள் நியமிக்கப்படவில்லை.

மேற்கூறப்பட்ட பாடசாலைகள் அனைத்தும் பின்தங்கிய பிரதேசங்களை சேர்ந்தவையாகும்.

இந்நிலையில் நடப்பாண்டில் 52 ஆசிரியர்கள் வலய இடமாற்றம், மாவட்ட இடமாற்றம் ஆகியவற்றில் சேவைக்காலத்தை பூர்த்தி செய்து இடமாற்றலாகி செல்லவுள்ளனர்.

அத்துடன் இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 13 ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களுக்கு மீள் திரும்பிச் சென்றுள்ளனர்.

எனவே ஒட்டுமொத்தமாக இவ் வெற்றிடங்கள் ஏற்படுமிடத்து 152 ஆசிரியர்கள் பற்றாக் குறை ஏற்படவுள்ளது.

எனவே உரிய தரப்பினர் இவ் விடயத்தில் கவனமெடுத்து பாடசாலைகளில் முதலாம் தவணை முடிவடைவதற்கு முன்னதாக ஆசிரியர்களை நியமித்து தர வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோரும் மற்றும் கல்வியியலாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-15)




## ஒரே தடவையில் இரு கன்றுகள்



(கிளிநொச்சி)

பசு மாடு ஒன்று ஒரே தடவையில் இரண்டு நாம்பன் கன்றுக் குட்டிகளை அண்மையில் ஈன்றுள்ளது.

ஒரே தடவையில் இரு கன்றுகளை ஈனும் அரிதான சம்பவம் கிளிநொச்சி இல-82, உருத்திரபுரம் D -10 இல் வசிக்கும் முருகேசு - பத்மநாதன் வீட்டில் நடைபெற்றுள்ளது.

தற்போது பசுவும், கன்றுக்குட்டிகளும் ஆரோக்கியத்துடன் உள்ளதைப் படத்தில் காணலாம். (அ-2-254)



வவு/விக்னேஸ்வரா மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றபோது....

# நெல்லைக் கொள்வனவு செய்ய நிதி இதுவரை கிடைக்கவில்லை

## வவுனியா ப.நோ.கூ.சங்கம் தெரிவிப்பு

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கமானது விவசாயிகளிடமிருந்து நியாய விலையில் நெல்லைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அறுவடை நிறைவுக்கு வந்த நிலையில் வங்கிகளினூடாகப் பெற்ற கடன்களை அடைப்பதற்காக நெல்லை உடனடியாக விற்பனை செய்யவேண்டிய தேவை விவசாயிகளுக்கு உள்ளது.

எனினும், நிர் ணயிக்கப்பட்ட விலையில் நெல்லை எவரும் கொள்வனவு செய்யாத நிலையுள்ளது.

களஞ்சிய வசதி இன்மையால் தனியாருக்கு குறைந்த விலையில் நெல்லை விற்பனை செய்ய வேண்டியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் தெரிவிக்கையில்,

"வவுனியா மாவட்டத்தில் வருடா வருடம் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்வதற்காக அரசாங்க அதிபரினால் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதி. இம்முறை வழங்கப்படாமையாலேயே நெல் கொள்வனவு செய்யப்படவில்லை.

கடந்தமுறை அரசாங்க அதிபரினால் 85 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டு நெல் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அந்த நிதி மீள்செலுத்தப்பட்டு மீண்டும் 10 மில்லியன் ரூபாய் பெறப்பட்டு நெல் கொள்வனவின் பின்னர் மீள் செலுத்தப்பட்டது.

எனினும், இம்முறை நிதி வழங்குமாறு நாம் கோரியுள்ள நிலையிலும் இதுவரை நிதி வழங்கப்படவில்லை.

நாம் நெல்லை கொள்வனவு செய்யும் பட்சத்தில் அவற்றை களஞ்சியப்படுத்தும் வசதியை ஏற்படுத்தியுள்ளோம்.

நிதி தரும் பட்சத்தில் எமது விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்ய தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## ஆலோசனை கூட்டத்தை உடன் நடத்துங்கள்

### சிறுபோக விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான ஆலோசனைக் கூட்டங்கள் எதுவும் இதுவரை நடத்தப்படவில்லையென சிறுபோக நெல் விதைப்பில் ஈடுபடவுள்ள விவசாயிகளால் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக குளங்களின் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்வதற்கும் நீரை மீதப்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் காலம் தாழ்த்தாது சிறுபோக நெற் செய்கை மேற் கொள்வது மிகவும் சிறந்ததாகும் என விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர். குறிப்பாக இவ்வருடத்தில் இரணைமடுக்குளம், புதுமுறிப்பு குளம் ஆகிய குளங்களின் கீழ் சிறுபோக நெற் செய்கையில் விவசாயிகள் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே சம்பந்தப்பட்ட திணைக்களம் மற்றும் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப் [illegible] (அ-2-277)

## விபத்தில் ஒருவர் படுகாயம்



வேகக்கட்டுப்பாட்டை இழந்த சிறிய ரக வாகனம் ஒன்று தடம்புரண்டதில் அதில் பயணித்த மூவரில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுசிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் நேற்று காலை 6 மணியளவில் பூநகரிக்கும் பரந்தனுக்கும் இடைப்பட்ட ஓசியர் கடைச் சந்தியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

பரந்தனில் இருந்து பூநகரி நோக்கி பயணித்துக்கொண்டிருந்த சிறிய ரக வாகனம் ஒன்று மேற்குறித்த சந்தியை அண்மித்த வேளை திடீரென வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டது. இதன் போது வாகனத்தில் பயணித்த மூவரில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (அ-2-273)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்கண் வருமின், அஞ்சாமல் வெல்லுவீர்.
அன்புடன் பழகுமின் ஒற்றுமை வளர்ப்பீர்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ் பல்கலைக்கழக சமூகத்திற்கு எழுதும் அன்பு மடல் இது...

அன்புமிகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்திற்கு வணக்கம். போர்க்குற்ற விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டமைக்கும் உள்ளக விசாரணைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து நேற்றைய தினம் தாங்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி கண்டோம்.

நீண்டகாலத்திற்குப் பின்னர் ஒரு பேரணி நடந்ததை உணர முடிந்தது. மற்றும்படி பேரணி நடத்தப்பட்டதன் சாதக பாதகங்கள் பற்றி இவ்விடத்தில் பிரஸ்தாபிக்க விரும்பவில்லை.

அப்படியானால் எதற்காக கடிதம் எழுத முனைந்தீர்கள் என்ற கேள்வி நிச்சயம் உங்களிடம் எழும். அத்தகையதொரு கேள்வி எழும் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தின் சமூகக் கடமை பற்றி இவ்விடத்தில் தங்கள் கவனத்தை ஈர்ப்பதே இக் கடிதத்தின் நோக்கம் என்று கூறலாம்.

போர்க்குற்ற விசாரணை பிற்போடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது பொருத்தமாயினும் நாங்கள் எடுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையின் அசைவும் மிக நிதானமாக அமையவேண்டும். தமிழ் அரசியலில் வேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியும். அரசியலில் வேறுபட்ட கருத்துக்கள் இருப்பது நியாயமானதாயினும் வேறுபட்ட கருத்துக்களின் இலக்கு தமிழர்களின் உரிமை, வாழ்வியல், சுதந்திரம் என்பதாகவே இருக்க முடியும்.

சுயலாபம் கருதிய அரசியல் முன்னெடுப்புக்கள் தமிழ் மக்களை மீளமீள துன்பப்படுத்தும் என்பது நம் தாழ்மையான கருத்து என்பதை இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

அதேநேரம் நாம் முன்னெடுக்கின்ற போராட்டங்கள் வெளிப்படையான அர்த்தம் உடையனவாக அமைவதும் அவசியம். அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் அர்த்தப்பாடுகள் எத்தன்மையானவை என்பது இப்போது உலக நாடுகளால் அல்லது இலங்கை விவகாரம் குறித்து உன்னிப்பாகக் கவனிக்கின்ற சர்வதேச அமைப்புக்களால் மதிப்பீடு செய்யப்படும். அந்த மதிப்பீடு தமிழ் மக்களுக்கு சாதகமாக அமையும் போதே நீங்கள் முன்னெடுத்த எதிர்ப்புப் போராட்டம் வெற்றி பெறும்.

எனவே சர்வதேச சமூகம் சார்ந்த விடயங்களில் மிக நிதானமாக செயற்படுவது அவசியம். அந்தத் தகைமைப்பாடு பல்கலைக்கழக சமூகத்திற்கு நிறையவே உண்டு என்பதால் அது பற்றியும் இவ்விடத்தில் அதிகம் சுட்டிக்காட்ட வேண்டிய தேவை இல்லை.

நாம் இங்கு பிரஸ்தாபிப்பது எல்லாம் தமிழ் மக்களின் சமூக, பொருளாதார விடயங்களிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் அக்கறை கொள்ளவேண்டும் என்பதாகும்.

தமிழ் மக்களின் இன்றைய சமூக நிலைமை என்பது மிகவும் மோசமாகி உள்ளது. அதேநேரம் சமூகக் கட்டமைப்புகள் உடைந்து போகுமாயின் நாம் தமிழர் என்று சொல்வதற்கான அடையாளங்கள் எதுவும் இல்லாமல் போய் விடும்.

அதேசமயம் தமிழர் தாயகத்தில் ஏற்பட்டு வருகின்ற சூழலியல் பாதிப்புக்கள் பற்றிச் சிந்திப்பதும் அவற்றைச் சீர்மைப்படுத்த ஆய்வுகள் செய்வதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தின் கடமைப் பொறுப்பு என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஆகையால் மேற்குறிப்பிட்ட விடயங்களிலும் பல்கலைக்கழக சமூகத்தின் வகிபங்கு இருக்கும் போதே பல்கலைக்கழகத்தின் மீதான நம்பிக்கை தமிழ் மக்களிடம் உறுதி செய்யப்படும்.

ஆக, தமிழர்களின் உரிமை சார் விடயங்களில் தொடர் கவனிப்பு இருப்பதுடன் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மீள்வாழ்வுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும். இதைச் செய்வது உங்கள் கடமை என்பதை மறக்கமாட்டீர்கள் என நம்புகிறோம்.

# ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரசார மேடையில் மைத்திரி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரசார நடவடிக்கைகளில் பிரதான பங்கை வகிக்கவுள்ளார். சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே அவர் இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் நடுநிலை வகுக்கும் நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருந்து வந்தார். எனினும், மகிந்த தலைமையில் மூன்றாம் கூட்டணியொன்று உருவாக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதால், எதிர்கால அரசியல் நிலைவரங்களைக் கருத்தில் கொண்டு அவர் இவ்வாறானதொரு முடிவுக்கு வந்துள்ளார். அதாவது, பொதுத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சுதந்திரக்கட்சிக்கு தலைமைத்துவத்தை வழங்காவிட்டால், அக்கட்சியில் உள்ள பலர் மகிந்தவின் பக்கம் செல்லக் கூடும். அத்துடன், சு.கவும் இரண்டாக உடையும் நிலை ஏற்படும்.

கொழும்பில் நடைபெற்ற சு.க. உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பின்போது இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, கட்சியின் நலன் கருதியும், மகிந்த கூட்டணிக்கு கடிவாளம்போடும் நோக்கிலுமே அவர் பொதுத் தேர்தலில் பிரசார மேடைகளில் ஏறவுள்ளார். அத்துடன், நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரும் தேசிய அரசு அமைப்பதற்கு சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளனர். அதேவேளை, நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படாமல் அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் சு.க.உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவதற்கு முன்வந்துள்ளனர். (எ-11)

## முள்ளிவாய்க்காலில் நினைவிடம் வடக்கு மாகாண சபை ஆதரவு

(யாழ்ப்பாணம்)

2009ம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அந்தப் பகுதியில் நினைவிடம் அமைப்பதற்கு வடமாகாண சபை முழுமையான ஒத்துழைப்பினை வழங்கும் என முதலமைச்சர் கூறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மாகாண சபையின் 25-வது அமர்வில் குறித்த நினைவிடம் அமைப்பது தொடர்பிலான வாய்மொழிமூல வினாவினை மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் முன்மொழிந்திருந்தார்.

இதன்போது பதிலளித்த முதலமைச்சர், நினைவிடத்தை அமைப்பதற்கான நிதி போதுமானளவு மாகாண சபையிடம் இல்லை எனவும், அதனால் மக்கள் அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் நிதி பெறலாம் என ஆலோசனை வழங்குமாறும் கூறினார்.

மேலும் சட்டச் சிக்கல்கள் இருப்பின் அது குறித்தும் பார்க்கலாம் என்றார்.

இதனையடுத்து பேசிய அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், மாகாண சபைகள் சட்டத்தின்படி நினைவிடம் அமைப்பதற்கு அனுமதி பெறவேண்டும்.

எனவே அதற்கான அனுமதி கோரும் கடிதத்தை உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பி வையுங்கள் என கூறினார்.

அதனை ஒத்துக்கொண்ட மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை கடிதத்தை உள்ளூராட்சி அமைச்சருக்கு முதலமைச்சருக்கு அனுப்பி வைக்க இணங்கியுள்ளனர். (எ-4,11)

## ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை இணைத்தல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் காணப்படும் கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் ஆங்கில பாட ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவினால் கோரப்பட்டுள்ளது.

இப் பாடங்களில் பட்டத்தினை பூர்த்தி செய்த பட்டதாரிகள் தமது விண்ணப்பங்களை 06.03.2015 இற்கு முன்னதாக வட மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்ப படிவங்களை அறிவுறுத்தல்களையும் www.np.gov.lk எனும் இணைய தளமுகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும் அல்லது மாவட்ட செயலகங்களிலும் வலயக் கல்வி அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும் என வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறியத்தந்துள்ளார்.(எ)

# ஜனநாயகத்தை கட்டியெழுப்ப அரசு முயற்சிக்க வேண்டும்!

### சிங்கப்பூரில் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கே.சண்முகம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் ஊடாக இலங்கையில் மீண்டும் நல்லிணக்கம் மற்றும் ஜனநாயகம் கட்டியெழுப்பப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

நம்பகத்தன்மையுடன் அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையின் புதிய அரசாங்கம் மேற்கொண்டு வரும் இன நல்லிணக்க முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவை.

புதிய அரசாங்கத்துடன் தொடர்ச்சியான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள சிங்கப்பூர் அரசாங்கம் ஆர்வம் காட்டி வருவதாக வெளிவிவகார அமைச்சர் சண்முகம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்யும் முதல் உயர்மட்ட சிங்கப்பூர் அதிகாரி சண்முகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்த போது இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (எ-11)

## தங்கம் கடத்திய இலங்கையர் கைது

இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் சீர் செய்யப்படாத தங்க கட்டிகளை, இந்தியாவுக்கு கடத்திச் சென்ற இலங்கையர் ஒருவர் கொச்சி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் சென்ற அவர் கொச்சி விமான நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் செயற்பட்டதன் காரணமாக கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தான் கடத்திச் சென்ற தங்கங்களை விழுங்கிய நிலையில், எர்னாக்குளம் அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் அவரை விசாரிக்க முற்பட்ட போது தாம் சுகவீன முற்றிருப்பதாக தெரிவித்து தப்பிக்க முனைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, தங்க கட்டிகளை விழுங்கியிருந்தமை தெரிய வந்துள்ளது.

அவரின் வயிற்றுப் பகுதியிலிருந்து ஒரு தங்க கட்டி மீட்கப்பட்ட நிலையில் அவர் மொத்தமாக 13 தங்க கட்டிகளை விழுங்கியிருந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றனர். (எ-11)

## இலங்கை மீனவர்கள் 19 பேர் கைது

இந்தியக் கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 19 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இவர்கள் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கடல் எல்லையை தாண்டி குமரியிலிருந்து 60 கடல் மைல் தொலைவில் இலங்கை மீனவர்கள் மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களின் படகுகளும் இந்திய கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது எனவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-11)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கேட்டது கிடைக்கும்



✦ மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. அதை நாலாபுறமும் சிதற விட்டால் ஒன்று சேர்ப்பது கடினம்.

✦ இளம்மூங்கில் எளிதாக வளைவது போல, இளமையிலேயே மனதை நல்ல விடயங்களில் செலுத்துவது அவசியம்.

✦ நான் என்னும் அகங்காரத்தை அழித்து விட்டவன் கடவுளின் காட்சியைப் பெற்று மகிழ்வான்.

✦ கடவுள் கற்பக மரம் போல கேட்டதையெல்லாம் கொடுப்பதற்காகக் காத்திருக்கிறார்.

✦ நல்லவர்களின் கோபம் நீடித்து நிற்பதில்லை. தண்ணீரில் இட்ட கோலம் போல உடனே மறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கரைச்சி பிரதேச செயலகத்திற்கான

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி; உருத்திரபுரம் வி.கழகம் சம்பியன்



2015ஆம்ஆண்டின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிக்கான உதைபந்தாட்ட போட்டியின் 2 ஆவது தடவையாக உருத்திர புரம் விளையாட்டுகழகம் வெற்றி பெற்றது. கடந்த சனி , ஞாயிறு நடைபெற்ற இப்போட்டியில் 14 விளையாட்டு கழகங்கள்பங்குப ற்றியிருந்தன. இப்போட்டியின் இறுதிப்போட்டியில் உருத்திரபுரம் விளையாட்டுகழகத்தினை எதிர் த்து திருநகர் விளையாட்டுகழகம மோதிக்கொண்டது. இப்போட்டி யில் உதயதாரகை விளையாட்டு கழகத்தை 3-0 என்ற அடிப்படை யிலும் ஸ்கந்தா விளை யாட்டு கழகத்தை 2-0 என்ற அடிப்படை யில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறிய உருத்திர புரம் விளையாட்டு கழகமும் கனக புரம்விளையாட்டுகழகத்தை 2-0 என்றஅடிப்படை யிலும் இளந்தளிர் விளையாட்டுகழகத்தை 1-0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறு திப்போட்டிக்கு முன்னேறிய திருந கர் விளையாட்டு கழகமும் இறுதிப் போட்டியில்மோதிக்கொண்டன. ஏற்கனவே 2014 ஆம் ஆண்டி லும்இவ் இருஅணிகளுமே இறு திப் போட்டியில் ஈடுபட்டமை குறிப் பிடத்தக்கது.இறுதிப்போட்டி மிகவும விறுவிறுப்பாக நடை பெற்றதுடன் இருஅணி களும் போட்டிமுடியும் வரை எவ்வித கோல்களும் ரசிக ர்கள் மத்தியில் ஆரவாரதிக்கு குறை வில்லாது காணப்பட்டது. இப்போட்டியை கண்டுகளிக்க ஏராளமான ரசிகர்கள் வருகை தந்திருந்தனர். போட்டியின்போது எந்த அணியினரும் கோல்போடாத தினால் வெற்றியை தீர்மானிப்பத ற்கு சமநிலை உதைப்பு வழங்கப் பட்டது. இதில் உருத்திரபுரம் விளையாட்டு கழகம் 4-1 என்ற அடிப் படையில்வெற்றிபெற்று 2015 -ம் ஆண்டிற்கான கரைச்சி பிரதேச செயலர்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (க)




# இந்திய வெற்றி மகிழ்ச்சிதான்; ஆனால் முழுத்திருப்தி தரவில்லை

## டெண்டுல்கர் தெரிவிப்பு

நடப்பு சம்பியனான இந்திய அணி உலக கோப்பை போட்டியின் தொடக்க ஆட்டத்தில் பாகிஸ்தானை 76 ரன் வித்தியாசத்தில் தோறக டித்தது. 2ஆவது ஆட்டத்தில் பலம் வாய்ந்த தென்னாபிரிக்காவை 130 ரன் வித்தியாசத்தில் தோறகடித்தது.

இந்திய அணியை அனைவரும பாராட்டி வரும் நிலையில் டெண் டுல்கர் அணி மீது முழு திருப்தி இல்லை என்று கருத்து தெரிவித் துள்ளார்.

இந்தியா-தென்னாபிரிக்கா ஆட் டத்தை மெல்போன் மைதா னத்தில் நேரில் பார்த்த அவர் இது குறித்து கூறியதாவது,

இந்திய அணி சிறப்பான அடித் தளத்தை அமைத்துள்ளது, நான் பார்த்த வகையில் இது தெரிகிறது.

2 வெற்றிகளை பெற்றதன் மூலம அணி பிரகாசமாக திகழ் கிறது. இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சிதான். ஆனால் நான் இந்திய அணி மீது முழு திருந்தி அடையவில்லை. தொட ர்ந்து இது மாதிரியான ஆட்ட த்தை வெளிப்படுத்துவது அவசியம்.

இந்திய அணியின் துடுப்பாட டம் சிறப்பாக இருக்கும் என்று நான் ஏற்கனவே தெரிவித்து இருந்தே 2 ஆட்டத்தில் துடுப்பாட்டம் நன்றாக இருந்தது. ஆனால் இறுதி நேரத் தில் துடுப்பாட்டம் இன்னும் நன் றாக அமைய வேண்டும்.

ரகானே. துடுப்பாட்டம் பிர மாதமாக இருந்தது. ஸ்டெய்ன் ஓவரில் அவர் அடித்த சிக்சர் என்னை மெய்சிலிர்க்க வைத் தது. தவான் 2 போட்டியிலும் அபா ரமாக துடுப்பாட்டம் செய்தார். அவரது அதிரடியான ஆட்டம்தொடரும் என்று நம்புகிறேன். இவ்வாறு டெண்டுல்கர் கூறியுள்ளார். (க)

# அமரர் சந்திரலிங்கம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி-அச்சுவேலி றொக்கெட் சம்பியன்





அமரர்.ந.சந்திரலிங்கம் ஞாப கார்த்தமாக நடத்தப்பட்ட துடுப்பா ட்ட சுற்றுப்போட்டியில் அச்சுவேலி றொக்கெட் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று வெற்றிக்கிண்ண த்தை தனதாக்கி கொண்டது.

அச்சுவேலி பிரதேசத்துக்கு உட் பட்ட எட்டு அணிகள் பங்கெடுத்த மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதி ப்போட்டி அச்சுவேலி மத்திய விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடை பெற்றது. இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்ற அச்சுவேலி கோல்ட் ஸ்ரார் வி.கழகமும் அச்சுவேலி றொக்கெட் வி.கழகமும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த றொக்கெட் அணி நிர்ண யிக்கப்பட்ட 12 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 135 ஓட் டங்களை பெற்றுக்கொண்டது.

அந்த அணி சார்பாக நெக்ஸ் மன் 44 ஓட்டங்களையும் மதுசாந்த் 18 ஓட் டங்களையும் பெற்றுக் கொடு த்தனர். பந்து வீச்சில் கோல்ட்ஸ்ரார் அணியின் சுஜன்ராஜ் மற்றும் பிரேம் ஆகியோர் தலா 3 இலக்கு களை வீழ்த்தினர்.

136 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அச்சு வேலி கோல்ட்ஸ்ரார் அணி எதிர ணியின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 10 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 101 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

அந்த அணி சார்பாக கபில் 46 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் றொக்கெட் அணி சார் பாக துஷி மற்றும் டான்சன் ஆகி யோர் தலா 3 இலக்குகளை வீழ்த் தினர்.

இதனடிப்படையில் அச்சுவேலி றொக்கெட் அணி 34 ஓட்டங்களால் அச்சுவேலி கோல்ட்ஸ்டார் அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை தன தாக்கிக் கொண்டது.

இறுதிப் போட்டியில் ஆட்ட நாய கனாக றொக்கெட் அணி வீரர் நெக்ஸ்மனும் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக கோல்ஸ் டார் அணியின் கஜன்ராஜும் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக கோல்ஸ்டார் அணியின் பிரேம்குமாரும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# கிறிஸ்கெய்ல் - சாமுவேல்ஸ் ஜோடி 372 ரன்கள் குவித்து உலக சாதனை



கிறிஸ்கெய்ல் -சாமுவேல்ஸ் ஜோடி 2ஆவது விக்கெட்டுக்கு 372 ரன் குவித்து உலக சாதனை படைத தது. இதற்கு முன்பு டெண்டுல்கர் - டிராவிட் 331 ரன் (நியூசிலாந்துக்கு எதிராக, ஐதராபாத் 1999) குவித் ததே ஒரு ஜோடி எடுத்த அதிக ரன் னாக இருந்தது. அதை நேற்று கெய்ல் -சாமுவேல்ஸ் முறியடித்து உலக சாதனை படைத்தனர். உலக கிண்ண கிரிக்கெட் போட்டியின் நேற்றைய போட்டியில் மேற்கிந்திய தீவுகள்- சிம்பாவே அணிகள் மோதின இப்போட்டியிலெயே இச் சாதனை படைக்கப்பட்டது.

ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய வீரர் ரோகித் சர்மா, தென் ஆபிரிக்க வீரர் டிவில்லியர்ஸ் ஆகிய இருவரும் தலா 16 சிக்சர் அடித்து அதிக சிக்சர் அடித்த வர்களில் முதலிடத்தில் உள்ள னர். இன்றைய போட்டியில் கிறிஸ கெய்ல் 16 சிக்சர் அடித்து அவரது சாதனையை சமன் செய்தார்.(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணையை...

எதிர்வரும் மார்ச் மாதம் வெளியிடப்பட இருந்த இலங்கை மீதான ஐ.நா விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மார்ச்சிலேயே அறிக்கையை வெளியிடக் கோரியும் யாழ் பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் பேரணி யொன்று ஏற்பாடு செய்யப்பட்டு நேற்று நடை பெற்றது.

இந்தப் பேரணிக்கு பல்வேறு பொது அமைப்புக்கள், சமய அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் ஆதரவு வழங்கி யிருந்தனர். இதற்கமைய பல ஆயிரக் கணக்கானோர் நேற்றுக் காலை பல்கலைக்கழகத்தில் திரண்டிருந்தனர்.

யாழ் பல்கலைக்கழகத்தில் அமைதியான முறையில் ஆரம்பிக்கப்பட்ட பேரணியின் போது ஈழத் தமிழினம் மீதான இனப் படுகொலைக்கு உள்நாட்டு விசாரணை வேண்டாம், கொலைகாரனிடம் கொலைக்கான விசாரணையை ஒப்படைக்காதே, ஐ.நா விசாரணையாளர்களை இலங்கைக்கு அனுப்பி விசாரணைகளை ஆரம்பிக்குக உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் பேரணியில் கலந்து கொண்டிருந்தவர்கள் தாங்கியிருந்தனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி, பரமேஸ்வராச் சந்தியூடாக கந்தர்மடச் சந்திக்குச் சென்று அங் கிருந்து நல்லூர் ஆலயத்தைச் சென்றடைந்ததைத் தொடர்ந்து போராட்டமும் பேரணியும் அமைதியான முறையில் நிறைவடைந்தது.

இதன் போது பொறுமையையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்த முடியாமல் பேரணியில் கலந்து கொண்டிருந்த பிள்ளைகளை இழந்தவர்களும் தொலைத்தவர்களும் உறவுகளை இழந்தவர்களும் கண்ணீர் விட்டுக் கதறியழுதனர். காணாமல் போனவர்களின் உறவினர்கள் பலரும் அழுது கொண்டே மயக்கமடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் வாசுதேவ குருக்கள் ஆகியோரிடம் ஐ.நாவிற்கான அறிக்கையை யாழ் பல்கலைக்கழக சமூகம் கையளித்தது. இந்த அறிக்கையானது கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகத்தில் மன்னார் ஆயரினால் கையளிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# குற்றவாளி...

இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கை மார்ச் மாதம் வெளியிடப்படவிருந்த நிலையில் செப்ரெம்பர் மாதம் பிற்போடப்பட்டு மீண்டும் பிற்போடப்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. பிற்போடப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும். அதனால்தான் சர்வதேச விசாரணை அறிக்கையை மார்ச்சிலேயே வெளியிட வேண்டுமென்று நாம் கோருகின்றோம்.

இந்த நாட்டிலுள்ளவர்கள்தான் குற்றம் செய்துள்ளனர். ஆகவே குற்றம் செய்தவனே விசாரணை செய்ய முடியாது. குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவனும் நீதவானும் ஒருவராகவே இருக்க முடியாது. பாரபட்சமற்ற உண்மையான உலக சார்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அமைப்பு இந்த விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச அமைப்பாளர்களை நாட்டிற்குள் அனுமதித்து அரசின் ஒத்துழைப்புடன் விசாரணை செய்வதே உண்மையான நீதிக்கான பொறிமுறையாக இருக்கும். இவற்றை தவிர்த்து மேற்கொள்ளப்படுகின்ற வேறு விதமான நடவடிக்கைகள் எல்லாம் எம்மை ஏமாற்றும் செயலாகவே காணப்படும்.

அரசாங்கத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் 1 இலட்சத்து 46 ஆயிரத்து 879 மக்கள் இறுதிப் போர் நடைபெற்ற 8 மாதங்களில் கொன்று குவிக்கப்பட்டனர். அதாவது தாக்குதல் நடத்த மாட்டோம் என பாதுகாப்பு வலயப் பிரதேசமாக அறிவித்து அங்கு வைத்தே தொகை தொகையாக மக்களை கொன்றனர்.

இவ்வாறான படுகொலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தற்போது நல்லவர்களாக கூறப்படுகின்ற புதிய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் நீதிக்காக குரல் கொடுக்காது மௌனமாகவே ஆதரவு வழங்கியிருந்தனர். இந்நிலையில் உள்நாட்டு விசாரணையில் நம்பிக்கையில்லை. ஆக வே சர்வதேச விசாரணையே அவசியம் என்றும் தெரிவித்தார். (எ-4,11)

# சுமந்திரனின்...

களின் உறவினர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் சுமந்திரனின் உருவப்பொம்மை எரிக்கப்பட்டமை, மிக வருந்தத்தக்கது என சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனையடுத்து பேசிய மாகாணசபை உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன் குறித்த செயல் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனையடுத்து எழுந்து பேசிய மாகாண சபை உறுப்பினர் அனந்தி குறித்த சம்பவத்தின் போது தான் அங்கே இருந்ததாகவும் அதனை எரித்தவர்கள் யார் என உறுதிப்படுத்தப்படவில்லை என தெரிவித்ததுடன். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்த உணர்ச்சிவசப்பட்ட காணாமல் போனவர்களின் உறவினர்களால் இந்த உருவப் பொம்மை எரிக்கப்பட்டிருக்கலாம் என தெரிவித்தார்.

மேலும் குறித்த உருவப்பொம்மை திட்டமிட்டு எரிக்கப்படவில்லை எனவும் கூறினார்.

பின்னர் பேசிய மாகாணசபை உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன் குறித்த உருவப் பொம்மை எரிப்பு சம்பவம் திட்டமிட்டு சுமந்திரனின் புகைப்படம் பிரதி எடுக்கப்பட்டு முன்னதாகவே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது என கூறினார்.

பின்னர் பேசிய அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் குறித்த சம்பவத்தை யார் செய்திருந்தாலும் அது மிக பிழையான செயல என சுட்டிக்காட்டினார். (எ-4)

# ஐ.நா அலுவலகம்...

வாக சென்னையில் உள்ள ஐ.நா அலுவலகம் முன் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது.

யாழ் பேரணிக்கு ஆதரவாக சென்னையில் சமநேரத்தில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்தில் நூற்றுக்கும்மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். (எ-11)

# ஜனாதிபதி...

க்குழுவின் விசாரணைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் மார்ச் 2 ஆம் திகதி வரை திருகோணமலையில் நடைபெறவுள்ளது. அதன்பின்னர் மேற்படி குழுவினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போதே இடைக்கால அறிக்கையை வெளியிடுவது தொடர்பான திகதி நிர்ணயிக்கப்படும் என அறியமுடிகின்றது. மார்ச் மாத நடுப்பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டு பயணங்களில் ஈடுபடவுள்ளதால் இடைக்கால அறிக்கை முற்பகுதியில் வெளியாவதற்கான சாத்தியங்கள் அதிகம் இருக்கின்றன. எனினும், இது பற்றி ஜனாதிபதி செயலகம் இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுக்கவில்லை. மேற்படி விசாரணைக்குழுவின் பதவிக்காலம் ஓகஸ்ட் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளதால், புதிய அரசு அக்குழுவின் செயற்பாடுகளில் எத்தகைய மாற்றங்களையும் செய்யாது என ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார். (எ-11)

# தூண் இடிந்து...

நிறுவுவதற்கு பயன்படுத்திய பலகையை குறித்த தொழிலாளி அகற்றிய போது தூண் இடிந்து தொழிலாளியின் மீது விழுந்துள்ளது.

இடிந்து விழுந்த தூணுக்குள் சிக்குண்ட தொழிலாளி உடல் நசுங்கி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

சம்பவத்தில் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான எஸ். ஆனந்த் (வயது-42) எனும் தொழிலாளியே உயிரிழந்துள்ளார்,

இவரது சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி என். பிரேம்குமார் மேற்கொண்டார். (எ-4,85)


## தேவை
## Hotel Lux Etoiles

**Receptionist (வரவேற்பாளர்)**

ஆண், பெண் இருபாலாரும்

**முன்னிடம்:**

தமிழ், ஆங்கிலம், சிங்களம் மூன்று மொழிகளும் எழுத வாசிக்க பேசத் தெரிந்தவர்கள்
அல்லது
ஆங்கிலம், தமிழ் பரிபூரணமாக எழுத வாசிக்க பேசத் தெரிந்தவர்கள் மட்டும்

**நேர்முகப் பரீட்சைக்கான நேரம்:** 10 AM - 1.30 PM வரை

**இடம்:**- 34, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

(C-159)

***** Lux Etoiles & II**

**Lux Pizza, Francisco Varano Group**



## யா/பரமேஸ்வரா வித்தியாலயம்,
## திருநெல்வேலி.

**இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2015**

காலம் : இன்று 25.02.2015 புதன்
நேரம் : பிற்பகல் 2.00 மணி
இடம் : பாடசாலை மைதானம்

**பிரதம விருந்தினர்**
உயர்திரு. **தில்லையம்பலம் சிறிதரன்**
(ஓய்வுநிலை வருமான வரி அதிகாரி, அமெரிக்கா, பழைய மாணவன், யா/பரமேஸ்வராக் கல்லூரி)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு. T. கிருஷ்ணகுமார் (ஓய்வுநிலை அதிபர்)
திரு. த. பிருதிவிராஜ் (முகாமையாளர், இலங்கை வங்கி, திருநெல்வேலி)

**கௌரவ விருந்தினர்கள்**
திரு. இ. குமரேசன் (வேலை மேற்பார்வையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
திரு. S. சாந்தகுமார் (தொழில் அதிபர், செல்வா எலக்றிக்கல்ஸ், திருநெல்வேலி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பா.அ.ச, பா.அ.குழு, ப.மா.ச (இ)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603, 021 567 1522



## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 15 - 02 - 1935

இறப்பு 26 - 01 - 2015



அமரர்

## நாகலிங்கம் கணேசபிள்ளை

தந்தையாய்த் தாயாய் குருவாய் வழிகாட்டியாய்
வாழ்ந்த தெய்வமே கல்விப் பணிக்காய்
சிந்தைவைத்து காலமெல்லாம் நல்லாசிரியனாய் உழைத்து
ஆயிரமாயிரம் சுடர்தீபங்கள் ஒளிரவைத்தனை
எந்தையிறைவனை மறவாத சிந்தையுடன் தென்புலத்தார் தெய்வம்
விருந்தென இல்லற தர்மங்கள் நிறைவு செய்தாய்
தந்தி முகனருளால் நிறைவாழ்வு வாழ்ந்து சிவலோக நாயகன் சேவடி
அடைந்த தெய்வமே இப்புனித நாளில் வணங்குகின்றோம் ஐயா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

26.01.2015 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு **இன்று 25.02.2015 புதன்கிழமை** எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மேலும் எமது குடும்ப குலவிளக்கின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் வந்து துயரில் பங்குகொண்ட உறவுகள், நண்பர்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த வெளிநாட்டு, உள்நாட்டு உறவினர்கள், பலவழிகளில் உதவி புரிந்த உறவுகள் அன்பு உள்ளங்களுக்கு எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

[illegible]
இணுவில் தெற்கு.

(9611)

நீங்காத நினைவுகளில்
குடும்ப உறவுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனவாத...

அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், மத அமைப்புக்கள், கலைஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் இந்த பேரணியில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.

சில தரப்பினர் சில ஊடகங்களையும் இணைத்துக்கொண்டு மீண்டும்நாட்டில் இனவாதத்தை தூண்டும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இனவாதத்திற்கு எதிராக நடத்தப்பட உள்ள இந்தப்போராட்டத்திற்கு ஆயத்தமாகுமாறு ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறிவித்துள்ளார். (எ-11)


BBA, Bcom
(MANAGEMENT) (MEDIEM TAMIL)
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- A/L-ல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க.
- கடந்த ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்கட்கான புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 28.05.2015 (காலை 8.00 மணி)-
- இக்கற்கை நெறிக்கான கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம் T.P. : 021 222 8148 (C-151)



FRENCH MOVIES - JAFFNA
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
CAMILLE REWINDS
Camille rewinds - and goes back to the time of her first love (2012, 115 min.)
on
Thursday 26 February 2015 at 4:00 p.m.
at
Alliance Française de Jaffna.
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 021 222 8093
French Language. English subtitles. Free entrance
(9608)



BBA, Bcom
(MANAGEMENT) (MEDIEM TAMIL)
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- A/L-ல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க.
- கடந்த ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்கட்கான புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 28.05.2015 (காலை 8.00 மணி)
- இக்கற்கை நெறிக்கான கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம் T.P. : 021 222 8148 (C-151)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி


வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் நம்பகரமான ஓரேயொரு சர்வதேச நிறுவனம். உலகம் முழுவதும் 1040 கிளைகள். CERTIFICATES, INTERNATIONAL DIPLOMAS. யாழ். பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). யாழ், வன்னி, மன்னாரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு போகிறார்கள். O/L, A/L மாணவர்களுக்கு கட்டண குறைப்பு
வகுப்புகள் ஆரம்பம் 08.03.2015 உடன் அழையுங்கள்..
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்



வெளிவந்துவிட்டது
க/பொ/த உயர்தர கடந்த கால வினா விடை (PastPaper)
2014 உள்ளடங்கலாக
English & Tamil Medium
+ 15%- 20% வரை விசேட விலைக்கழிவு
தரம் 10 விஞ்ஞானம் வெளிவந்துவிட்டது கலாநிதி ஆ.யோகராஜா லோயல் அச்சகம்
தரம் 10 தமிழ் வெளிவந்துவிட்டது இ.க.சிவஞானசுந்தரம்
யாழ்.புத்தகசாலை
305, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகில்)
T.P:0214545552, 0778349507 (C-155)



V2 Travels and Tours

| | |
|---|---|
| அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் குறைந்த கட்டணத்தில் முற்பணமின்றி உங்கள் இல்லத்திற்கே பயணச்சீட்டுக்கள் கொண்டுவந்து தருகின்றோம் | யாழ்ப்பாணம் 49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால் 0773867257 |
| அனைத்து நாடுகளிற்குமான வீசா ஆலோசனைகள், online, விண்ணப்பப்படிவங்கள், நிராகரிக்கப்பட்ட -Rejected visas துறைசார், சட்டவல்லுனர்களின் உதவியுடன் செய்து தரப்படும் | நெல்லியடி முடக்காட்டுச்சந்தி 0776699892 |
| வெளிநாட்டிலிருந்து இலங்கை வருபவர்களின் இலங்கை வீசா நீட்டிப்பு கொழும்பு செல்லவேண்டிய தேவையின்றி எமது அலுவலகங்களிலேயே செய்து தரப்படும் | வல்வெட்டித்துறை யாழ்வீதி - வல்வெட்டி 0776697960 |
| கட்டார்,மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வோருக்கான விமானப்பயணச்சீட்டுக்கள் மற்றும் பயண ஒழுங்குகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும் | |

- மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 மாத பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்புக்கள்
- எம்முடன் இணைந்து தொழில்செய்ய விரும்பும் முகவர்கள், தனிநபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்






2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்.
Computer Repair
0779086737 GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.
(9607)



ஆங்கிலக் கல்வி
பாடசாலை பாடத்திற்கமைய தரம் 1, 2, 3 மாணவர்களுக்கான ஆங்கிலக் கல்வி சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் கற்பிக்கப்படும்.
பதிவுகள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு
AHEAD TRUST
40, வைமன் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம். (9605)
Tel : 021 320 2545 / 077 8841 375


TCT MULTI TRADE CENTRE

# அழைப்பிதழ்

## INVITATION

### வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நிகழ்வு
### (Drinking Water Filtration Plant System)

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் 35 இலட்சம்ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இன்று வைபவரீதியாக திறந்து வைக்கப்படவிருக்கிறது. வட மாகாண சபையின் முதலமைச்சர் கௌரவ க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் வடமாகாண சபையின் சுகாதார அமைச்சர் கௌரவ வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் அவர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

The Opening Ceremony of
Drinking Water Filtration Plant System
Donated to the District General Hospital – Vavuniya
By
Thiyahie Charitable Trust with the sponsorship of its Founder Mr. V. Thiyagendran

Date: 25.02.2015
Time: 4.00 pm

Chairperson
Dr. K. Akilendran
(Director, District General Hospital, Vavuniya)

Chief Guest
Chief Minister of Northern Province
Hon. Justice C.V.Wigneswaran

Special Guests
Hon. Dr.P.Sathiyalingam
(Minister of Health, Northern Province)

Mr.R.Raveenthiran
(Secretary, Ministry of Health, Northern Province

Mr. C. Kamalanaathan
(Director, Thiyahie Charitable Trust)

AGENDA
4.00 pm: Arrival of Chief Guest
Welcome Procession
Unveiling of Plaque
Lighting of Traditional Oil Lamp
Welcome Speech

Introduction Speech
(Mr. C. Kamalanaathan, Director, Thiyahie Charitable Trust)

Address by Chairperson
(Dr. K. Akilendran, Director, District General Hospital, Vavuniya)

Address by Special Guests
Hon. Dr.P. Sathiyalingam
(Minister of Health, Northern Province)

Address by Chief Guest
(Chief Minister of Northern Province, Hon. Justice C.V. Wigneswaran)
Vote of Thanks

(c-233)

All are cordially welcome !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.